விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 08 செவ்வாய்க்கிழமை (21.04.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 123

# பாதுகாப்பு வலயத்தில் சோகம்; நேற்று ஆயிரத்து 496 பேர் பலி!

## சுமார் 3 ஆயிரத்து 333 பேர் படுகாயம்

(கொழும்பு)

வன்னி பாதுகாப்பு வலயப் பகுதிகளில் நேற்று மேற்கொள்ளப்பட்ட எறிகணை மற்றும் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல்களில் சுமார் ஆயிரத்து 496 பேர் உயிரிழந்துள்ளதுடன் 3 ஆயிரத்துக்கும் அதிகமானோர் படுகாயமடைந்ததாக வன்னித் தகவல்களை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன. உயிரிழந்தவர்களில் 476 சிறுவர்களும் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது. (10ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரன் சரணடைய 24 மணிநேரக் கெடு

### அரசு அறிவிப்பு

(கொழும்பு)

24 மணிநேரத்துக்குள் பிரபாகரனும் அவரது குழுவினரும் சரணடைய வேண்டும். இல்லையேல் இலங்கை இராணுவம் அவர்களை அடியோடு வீழ்த்திவிடும் என அரசாங்கம் நேற்று அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

பாதுகாப்பு (10ஆம் பக்கம் பார்க்க)

## புதுமாத்தளனில் தற்கொலைத் தாக்குதல்!

(புதுமாத்தளன்)

பாதுகாப்பு வலயத்திலிருந்து மக்கள் வெளியேறி வரும் பகுதியில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் குறைந்தது 17 பேர் கொல்லப்பட்டிருப்பதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

தற்கொலைக் குண்டுத் தாக்குதலொன்று நடத்தப்பட்டுள்ளது. இதில் 17 பொதுமக்கள் கொல்லப்பட்டிருப்பதாக எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன என பெயர் குறிப்பிட விரும்பாத இராணுவ (10ஆம் பக்கம்பார்க்க)


## 35ஆயிரம் மக்கள் படையினரிடம் தஞ்சம்; புதுமாத்தளனில் 3 கிலோ மீற்றரும் மீட்பு!

### பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த புதுமாத்தளன், வலைஞர்மடம் மற்றும் அம்பலவன் பொக்கணை பகுதிகளில் இருந்து சுமார் 35ஆயிரம் பொதுமக்கள் இராணுவத்தினரிடம் தஞ்சமடைந்துள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

புதுமாத்தளன் மேற்கு பகுதியிலுள்ள (10ஆம் பக்கம்பார்க்க)



## வன்னியிலிருந்து வெளியேறும் மக்களை தங்கவைக்க ஏற்பாடு

(கொழும்பு)

முல்லைத்தீவு பாதுகாப்பு வலய பகுதியில் இருந்து பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்கள் இராணுவத்தின் கட்டுப்பாட்டு பகுதிக்குள் வந்துள்ளதாக இராணுவம் அறிவித்துள்ளதை அடுத்து வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்ட அரச செயலக அதிகாரிகள் கூடி, இடம் பெயர்ந்து வரும் மக்களைத் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகள் குறித்து ஆராய்ந்துள்ளனர்.

ஓமந்தை பகுதிக்கு நேற்று ஐயாயிரம் பேர் வந்திருப்பதாக (10ஆம் பக்கம் பார்க்க)

## பிரி.நாடாளுமன்ற வீதியில் தமிழர்கள் போராட்டம்

(லண்டன்)

பிரித்தானியாவில் கடந்த 14 நாட்களாக தமிழ் மக்களால் நடத்தப்பட்டு வரும் ஆர்ப்பாட்டத்தினை கலைப்பதற்கு மேற்கொள்ளப்பட்டமுயற்சிகளுக்கு எதிராக நேற்று அதிகாலை தொடக்கம் பிரித்தானிய நாடாளுமன்ற வீதியையும் நாடாளுமன்றத்துக்கு முன்பாக உள்ள சதுக்கத்தையும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட தமிழர்கள் முற்றுகையிட்டுள்ளனர். (10ஆம் பக்கம் பார்க்க)

## இன்று கப்பல் சேவை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்குமான பயணிகள் கப்பல் சேவை இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும் என அரசாங்க அதிபர் க. கணேஷ் அறிவித்துள்ளார்.

நேற்று திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறை நோக்கி கப்பல் புறப்பட்டதாக யாழ்.சிவில் நிர்வாக காரியாலய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (10ஆம் பக்கம் பார்க்க)

## புதுமாத்தளன் வைத்தியசாலை நேற்றுமுதல் செயலிழப்பு!

(வவுனியா)

முல்லைத்தீவு பகுதியில் உள்ள பாதுகாப்பு வலயத்தின் புதுமாத்தளன் வைத்தியசாலையை அண்மித்த பகுதியில் நேற்று முன்தினம் இரவு 11.30 மணியிலிருந்து இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற கடும் மோதல்களையடுத்து அந்த வைத்தியசாலை செயலிழந்துள்ளதாக அங்குள்ள வைத்திய அதிகாரி சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு வலயப் பகுதியான புதுமாத்தளன் பிரதேசத்தில் (10ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பாடசாலைகள் 27ஆம் திகதி ஆரம்பம்

(திருகோணமலை)

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகள் இரண்டாம் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக எதிர்வரும் 27ஆம் திகதி ஆரம்பமாகும் என வடமாகாண கல்விப் பணிப்பாளர் வி.இராசையா அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக (10ஆம் பக்கம்பார்க்க)



காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில்.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வன்னிப் பேரவலம்...



# விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டுள்ளது

## ரணில் விக்கிரமசிங்க சொல்கிறார்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகளை தொடங்குவதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றிய போது தெரிவித்திருக்கிறார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, தமிழீழ விடுதலைப் புலிகளின் புதிய சர்வதேச தொடர்பாளர் செல்வராஜா பத்மநாதனுடன் பேச்சுவார்த்தைகளை தொடங்குவதற்கு தான் விரும்புவதாக ஜனாதிபதியின் மூத்த ஆலோசகர் ஒருவர் தெரிவித்திருக்கின்றார் எனவும் நீர்கொழும்பில் இடம் பெற்ற ஐ.தே.கவின் பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய போது ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் இந்த பிந்திய நகர்வு தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் தான் கேள்வி எழுப்புவதாகத் தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க, விவாதம் ஒன்றுக்குத் தான் தயாராக இருந்த போதிலும் அவர் துரதிர்ஷ்டவசமாக அதனைத் தவிர்த்துவிட்டதாகவும் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகள் அமைப்புக்கு நன்மையளிக்கக்கூடிய வகையில் அவர்களுடனான போர் நிறுத்த உடன்படிக்கையை நான் கைச்சாத்திட்டதாக அரசாங்கம் என் மீது குற்றச்சாட்டைச் சுமத்துகின்றது எனக் குறிப்பிட்ட ரணில் விக்கிரமசிங்க, நான் அவ்வாறு செய்திருந்தால் விடுதலைப் புலிகள் என்னைத்தான் அரச தலைவராக்கியிருப்பார்கள் ஆனால், அவர்கள் அரச தலைவர் தேர்தலில் என்னைத் தோற்கடிக்கும் வகையில் செயற்பட்டது நான் தேசத்துக்குத் துரோகம் செய்யவில்லை என்பதையே புலப்படுத்துகின்றது எனவும் சுட்டிக்காட்டினார். (ச-5)

# மூன்று தமிழ் இளைஞர்கள் வவுனியாவில் சுட்டுக் கொலை

(வவுனியா)

வவுனியாவில் உள்ள தேவர்குளம் பகுதியில் மூன்று தமிழ் இளைஞர்கள் நேற்று முன்தினம் காலை சுட்டுக்கொல் லப்பட்டனர்.

தலை மற்றும் மார்பு பகுதிகளில் கடுமையான துப்பாக்கி சூட்டுக் காயங்களுடன் இவர்களின் உடலங்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை வவுனியா வைத்தியசாலையில் பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டது.

கொல்லப்பட்ட மூவரும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை சேர்ந்தவர்கள் எனவும் நேற்று முன்தினம் காலை தாம் மேற்கொண்ட நடவடிக்கை ஒன்றின் போது இவர்கள் கொல்லப்பட்டதாகவும் இராணுவத் தினர் தெரிவித்துள்ளனர்.

இவர்களிடம் இருந்து துப்பாக்கிகள் மற்றும் கைக்குண்டுகள் போன்ற சில ஆயுதங்கள் மீட்கப் பட்டதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வவுனியா மருத்துவமனை பிரேத அறையில் இந்த மூவரது உடலங்களும் வைக்கப் பட்டுள்ளன. இவர்களின் மரணம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-5)


## தவறிவிட்டது

தர்மலிங்கம் மகேஸ்வரி என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.497230748V) 11.04.2009 அன்று யாழ்ப்பாணம்-பருத்தித்துறை வீதி பஸ் பிரயாணத்தின் போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும்.

*தொடர்பு:* பிளேக் றோட், சங்கானை.

T.P.021 4590012 (C-2393)


# நோர்வே தூதரகத்தை மூடுமாறு வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கொழும்பில் உள்ள நோர்வே தூதுவரை வெளியேறுமாறும் நோர்வே தூதரகத்தை மூடிவிட வேண்டும் எனவும் வலியுறுத்தி தேசிய சுதந்திர முன்னணி, ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கொழும்பு வோட் பிளேசில் உள்ள நோர்வே தூதரத்திற்கு முன்பாக நேற்றுத் திங்கட்கிழமை காலை 10 மணி தொடக்கம் முற்பகல் 11.30 மணி வரை நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பௌத்த குருமார் உட்பட நூற்றுக் கணக்கான சிங்கள கடும் போக்காளர்கள் கலந்து கொண்டனர்.

போரில் தோல்வியடையும் விடுதலைப் புலிகளின் தலைவர்களை நோர்வே காப்பாற்ற முற்படுகின்றது. மறைமுகமாக புலிகளுக்கு நிதியுதவி செய்கின்றது என ஆர்ப்பாட்டக் காரர்கள் முழக்கம் எழுப்பினர். நோர்வே தூதுவர் மற்றும் சர்வதேச பிரதிநிதிகள் ஆகியோருக்கு விடுதலைப் புலிகளின் சீருடை அணிந்த பதாகைகளையும் ஆர்ப்பாட்டக் காரர்கள் கையில் ஏந்தியிருந்தனர்.

நோர்வேயின் நடவடிக்கைகளுக்கு எதிராக எழுதப்பட்ட வாசக அட்டைகளும் ஆர்ப்பாட்டகாரர்களின் கைகளில் காணப்பட்டன. விமல்வீரவன்ச உட்பட தேசிய சுதந்திர முன்னணியினதும் ஹெல உறுமயவினதும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனார். (ச-5)

# கண்காட்சியும் விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

சுவிஸ் நாட்டின் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்பிற்குமான முகவர் அமைப்பின் ஆதரவுடன் பனை அபிவிருத்தி சபை நடத்தும் பனங் கைப்பணி பொருட் கண்காட்சியும் விற்பனையும் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.கொட்டடி சனசமூக நிலையத்தின் தலைவர் இரா.செல்வவடிவேல் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சுவிஸ் நாட்டின் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான முகவர் அமைப்பைச் சேர்ந்த ஹான்ஸ் பீற்றர் எற்றரும் சிறப்பு விருந்தினர்களாக பனை அபிவிருத்தி சபை கணக்காளர் வி.பி.தேவராசா, பனை அபிவிருத்திச்சபை விரிவாக்கல் உத்தியோகத்தர் கா.கோபால கிருஸ்ணன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-3)

# வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை எல்லைக்குள் அமைந்த குருநகர் பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி (A.R.V) இன்று செவ் வாய்க்கிழமை காலை 9.30 மணி முதல் 11.30 மணி வரை பாங்சால் வீதி 3ஆம் குறுக்குத் தெரு சந்தியிலும் பிற்பகல் 1.30 மணிமுதல் 3.30 மணிவரை புதுமைமாதா சன சமூக நிலையத்திலும் வைத்து ஏற்றப் படவுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தை பயன் படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு இத் தடுப்பூசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் கேட்டுக் கொண்டுள்ளார். (ச-2)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கோவில் வீதி நல்ல சூழலில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

*தொடர்பு:-* T.P.0778715616 (2542)

## இன்று ஒரு தகவல்

# கனவு – சில ஆய்வுகள்

ஒருவருக்கு இப்பொழுது 60 வயது என்று வைத்துக் கொள்ளுங்கள். அவர் இதுவரைக்கும் 20 ஆண்டுகள் தூங்கிக் கழித்திருக்கிறார். அந்த 20 ஆண்டுகளில் 5 வருடத்தை கனவு கண்டே கழித்திருப்பார்.

ஒரு மனிதன் தன் வாழ்நாளில் மூன்றில் ஒரு பங்கை தூங்கிக் கழித்து விடுகிறான். அப்படித் தூங்கும் நேரத்திலும் நான்கில் ஒரு பங்கு நேரத்தை கனவு காண்பதில் கழித்து விடுகிறான்.

ஒருவர் தூங்கிக் கொண்டிருக்கிறார். இப்பொழுது அவர் கனவு கண்டு கொண்டிருக்கிறாரா இல்லையா என்பதை எப்படிக் கண்டு பிடிப்பது? ஒரு ஆய்வாளர் இதற்கு ஒரு வழியைக் கண்டு பிடித்தார்.

அதாவது தூங்குபவரின் கண்களைக் கவனித்துப் பார்க்க வேண்டும். அதில் ஓர் அசைவு ஏற்படும். அந்த அசைவை மின்சாரக் கருவிகள் மூலம் பதிவு செய்து பார்த்தார்.

அதிலிருந்து கனவு கண்டு கொண்டிருக்கும் ஒருவரின் கண்கள் வேகமாக அசைகிறது என்பதையும், கனவு காணாமல் தூங்கும் ஒருவருடைய கண்கள் மெதுவாக அசைகிறது என்பதையும் கண்டு பிடித்தார்.

அத்துடன் விடவில்லை. தூங்குபவரின் இதயத்துடிப்பு, சுவாச வேகம், மூளை மின்னலைகள் இவற்றையெல்லாம் பதிவு செய்தார்.

விழிப்பு நிலையில் வெளிப்படும் மூளை மின்னலைகளுக்கும் தூக்க நிலையில் வெளிப்படும் மூளை மின்னலைகளுக்கும் வித்தியாசம் இருந்தது.

அதே போல் கனவுகாணும் நிலை, கனவு, காணாத நிலையிலும் கூட வித்தியாசம் இருந்தது.

மற்றொரு ஆய்வாளரான (William C. Dement) என்பவர் கனவு காணும் போது சுவாசம், இதயத் துடிப்பு, கண்ணசைவு என்பவை அதிகரிப்பதாக கண்டு பிடித்தார்.

கனவு பற்றிய ஆராய்ச்சிகளில் மூளை மின்னலை, விரைவான கண்ணசைவு என்பவற்றிற்கு முக்கிய பங்குண்டு.

Hans Berger என்ற ஜேர்மனிய உளவியல் நிபுணர் மண்டையை ஒட்டி மின்வாய்களை வைத்து மூளையில் தோன்றும் மின்னழுத்த வேறுபாடுகளைப் பதிவு செய்யலாம் என்று கண்டுபிடித்தார்.

அந்தத் தத்துவத்தின் அடிப்படையில் தான் மூளை மின்னலை வரைவி (Electro Encephalogram) என்ற கருவி உருவாக்கப்பட்டது.

Alfred Marry என்ற ஒரு ஆராய்ச்சியாளர் உதவிக்குச் சிலபேரை வைத்துக் கொண்டு தன்னையே கனவுப் பரிசோதனைக்கு உட்படுத்திக் கொண்டார்.

அவர் தூங்கும் போது அவருடைய மூக்குக்கு அண்மையில் ஒரு செண்ட் போத்தலை காட்டினார்கள்.

அவர் கெய்ரோவில் இருக்கும் ஒரு வாசனைப் பொருள் விற்பனைக் கடையில் நின்று கொண்டிருப்பது போல் கனவு கண்டாராம்.

அவருடைய முகத்தில் சிவப்பு நிற ஒளி விழச் செய்தார்கள். அப்பொழுது அவருடைய கனவில் புயலும் இடியும் மின்னலும் வந்ததாம்.

பெரும்பாலான கனவுகள் நாளாந்த நடவடிக்கைகள் சம்பந்தப்பட்டவையாகத்தான் இருக்கும்.

நமது வலுவான உணர்ச்சிகள், உள்ளப் போராட்டங்கள், தீராத ஏக்கங்கள், பயம் இவற்றின் பிரதிபலிப்புகளைத்தான் நாம் கனவுகளாகக் காண்கிறோம்.

நம்ம ஆள் ஒருவர், துணைக்கு ஒருவரை வைத்துக் கொண்டு கனவு ஆராய்ச்சி செய்தார். தூங்கி முழித்த பின் பார்த்தால் துணைக்கு இருந்தவரைக் காணவில்லை.

இவர் அழ ஆரம்பித்தார்.

"ஏன் சேர்... அழுகிறீர்கள்? அவன் ஓடிப் போய் விட்டான் என்பதற்காகவா?" என்றார்கள்.

"அவன் ஓடிப் போனதுக்காக அழவில்லை. நான் வைத்திருந்த பணத்தோடு ஓடிவிட்டான். அதற்காகத் தான் அழுகிறேன்" என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# முல்லைத்தீவில் அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு இல்லை

## அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவுப் பகுதியில் உணவு மற்றும் மருந்து பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுவதற்கு எதுவிதக் காரணமும் இல்லை.

ஆயிரத்து 300 மெட்றிக் தொன் பொருட்களுடன் திருப்பதி என்ற கப்பல் முல்லைத்தீவுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் எஸ்.பி. திவாரட்ண தெரிவித்தார்.

ஏப்ரல் மாதத்தில் மட்டும் இது வரையில் இரண்டாயிரத்து 600 மெட்றிக்தொன் அத்தியாவசிய பொருட்களை பொதுமக்களின் நலன் கருதி அரசாங்கம் முல்லைத்தீவிற்கு விநியோகித்துள்ளது எனவும் அவர் கூறினார்.

முல்லைத் தீவில் அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வெளியான செய்தி தொடர்பாக நேற்று முன்தினம் தெளிவுபடுத்துகையிலேயே அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் எஸ். பி. திவாரட்ண மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் கூறுகையில்,

ஏ 9 வீதி திறந்து இருக்கும் போது கூட தற்போது விநியோகிக்கப்படுவது போல் அத்தியாவசியப் பொருட்கள் வடக்கிற்கு வழங்கப்படவில்லை.

முல்லைத்தீவில் எவ்விதத்திலுமே உணவுப் பொருட்களுக்கோ மருந்து வகைகளுக்கோ தட்டுப்பாடு ஏற்பட முடியாதவாறு பொருட்களின் விநியோகம் சீராக நடைபெற்று வருகின்றது.

யுத்த சூழலில் பாதிப்பிற்குள்ளான பொது மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய அரசாங்கம் அக்கறை காட்டி வருகின்றது.

எந்த வகையிலுமே அத்தியாவசிய உணவுப் பொருட்களையும் மருத்துவ வகைகளையும் நிறுத்தவோ, தட்டுப்பாடு ஏற்படுத்தவோ அரசாங்கம் முயலவில்லை.

வடக்கில் உணவுப் பொருட்களுக்கும் மருந்து வகைகளுக்கும் தட்டுப்பாடு ஏற்படுவதாக வெளியாகும் செய்திகள் உண்மையில்லை. சில வைத்தியர்கள் மருந்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக கூறுகின்றனர்.

பொது மக்களின் தேவைகளுக்காக அரசாங்கம் வழங்கும் உணவுப் பொருட்களையும் மருந்து வகைகளையும் புலி உறுப்பினர்கள் எடுத்துக் கொள்ள இடமளித்தால் அதற்கு அரசாங்கம் பொறுப் பேற்க முடியாது என்றார். (ஓ-4)

# மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த செயற்றிட்டம்

## சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபை ஏற்பாடு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் 3ஆயிரத்து 60 கிராமங்களை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்திற்கு மேலதிகமாக பிரதேச செயலக பிரிவுகள் தோறும் இரண்டு கிராமங்களைத் தெரிவு செய்து மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் செயற்றிட்டமொன்றினை சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபை இந்த ஆண்டு அமுல்படுத்தவுள்ளது.

சமுர்த்தி சமூக அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் நன்மை பெறும் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதன் மூலமாக நாட்டில் வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கும் சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கைகளை எடுத்துள்ளது. (ஓ-4)



கரணவாய் மணியகாரன் தோட்ட வித்தியாலய தரம் 1 கால்கோள் நிகழ்வில் வடமராட்சி கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி கமலாம்பாள் பஞ்சலிங்கம் மாணவர்களால் வரவேற்கப்படுவதையும் வித்தியாலய அதிபர் கி. கிருஷ்ணாகரன் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம் : அல்லைப்பிட்டி செய்தியாளர்)

## இராசி பலன்

21.04.2009
(சித்திரை 08, செவ்வாய்க்கிழமை)
ஏகாதசி முற்பகல் 11.05 மணிவரை
சதயம் பிற்பகல்12.00மணிவரை
இராகுகாலம் 3.01-4.31 மணிவரை
சுபநேரம் 10.31-12.01 மணிவரை
ஏகாதசி விரதம்

| | |
|---|---|
| மேடம் | பொருள் சேர்க்கை, காரிய அனுகூலம், தன்னம்பிக்கை, கீர்த்தி. |
| இடபம் | சுபநிகழ்வு, நல்ல செய்தி, அதிக பிரயாசை, காரிய நன்மை. |
| மிதுனம் | ஆன்றோர் மதிப்பு, புதிய திட்டமிடல், ஆரோக்கியக்குறைவு, பயணம். |
| கடகம் | அபகீர்த்தி, ஆரோக்கியக்குறைவு, போசன சுகம், முயற்சி தடங்கல். |
| சிங்கம் | திடீர் பயணம், அபூர்வ சந்திப்பு, பணவருவாய், காரிய அனுகூலம். |
| கன்னி | சுக வாழ்வு, பொருள் சேர்க்கை, நல்ல செய்தி, முயற்சி கைகூடும். |
| துலாம் | வியாபார நன்மை, குடும்பக் கவலை, காரிய இடையூறு, தனவிரயம். |
| விருச்சிகம் | கல்வியில் ஆர்வம், நண்பர்கள் சகவாசம், நல்ல முயற்சி, பயந்த சுபாவம். |
| தனுசு | கூட்டு முயற்சி, அன்னியர் சந்திப்பு, இனிய அனுபவம், தன லாபம். |
| மகரம் | கௌரவக்குறைவு, வீண் விவாதம், வேலைச்சுமை, முயற்சி தாமதம். |
| கும்பம் | நண்பர்கள் உதவி, ஆழ்ந்த சிந்தை, சயன சுகம், நல்ல முயற்சி. |
| மீனம் | உணர்ச்சி வசப்படல், உறவினர் சந்திப்பு, சுபசெலவு, இடமாற்றம். |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 |
| பச்சைமிளகாய் | 50 | 50 |
| தக்காளி | 140 | 140 |
| அவரை | - | - |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 70 |
| கோவா | 08 | 15 |
| கரட் | 25 | 30 |
| பூசணி | 15 | 30 |
| புடோல் | 60 | 70 |
| வாழைக்காய் | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 25-30 | 35,40 |
| பெரிய வெங்காயம் | 140 | 120 |
| பாகற்காய் | 60 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 50 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 |
| பயிற்றங்காய் | 50 | 50 |
| லீக்ஸ் | 180 | 180 |
| போஞ்சி | - | - |
| கீரை – 1 பிடி | 30 | 30 |
| தேசிக்காய் | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 |

## த.வி.கூட்டணியின் விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் விசேட கலந்துரையாடல் ஒன்று நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு இலக்கம் 57/48, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் யாழ்.மாவட்ட பணிமனையில் இடம்பெறும்.

கட்சித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் இடம்பெறவுள்ள இக் கலந்துரையாடலில் கட்சி உறுப்பினர்களையும், ஆதரவாளர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ந)

## கலை கலாசார நிகழ்வுகள்

உரும்பிராய் மேற்கு வைத்தீஸ்வரா சன சமூக நிலையத்தின் இளைஞர் சேவைகள் மன்றத்தினரால் வருடாந்தம் நடாத்தப்பட்டு வரும் சித்திரை புத்தாண்டுக்கான கலை கலாசார நிகழ்ச்சிகள் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 க்கு சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். தேசிய இளைஞர் சேவைகள் மன்ற நிஸ்கோ பொதுமுகாமையாளர் வி.பி.பஞ்சலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார். (ஓ-36)

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தால் நடத்தப்படும் நாடகமும் அரங்கியலும் பாட நெறியினை கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 25 ஆம்திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும் என யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (ஓ-30)




## கணனி தொழில்நுட்ப பயிற்சி

(நல்லூர்)

இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையால் நல்லூர், கோப்பாய், உடுவில், யாழ்ப்பாணம், தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவுகளில் கணனித் தொழில்நுட்ப கற்கை நெறியை NVQ II நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அத்தோடு நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் சனி, ஞாயிறு தினங்களில் அரச, தனியார் ஊழியருக்கான கணனித் தொழில்நுட்பப் பயிற்சி அடிப்படையில் இருந்து தேவைக்கேற்ப கற்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. கல்வியியல் கல்லூரி தேவை கருதிய மாணவர்களும் சனி, ஞாயிறு வகுப்புக்களில் அனுமதிக்கப்படுவர். விரும்புவோர் சுயவிபரக் கோவையை 103/01,ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு மாவட்ட இணைப்பாளர் கேட்டுக்கொள்கின்றார். (ஓ-18)

# சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்துகொண்டோர் எண்ணிக்கையில்

## யாழ்.மாவட்டம் முன்னணியில்

(யாழ்ப்பாணம்)

சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்துகொண்டோர் எண்ணிக்கையில் யாழ்.மாவட்டம் தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

கடந்த வருடம் 14 ஆயிரத்து 843 பேர் இணைந்துள்ளனர்.

சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தில் 2007 ஆம் ஆண்டு 277 பேர் இணைந்திருந்தனர். 2008 ஆம் ஆண்டில் 14 ஆயிரத்து 843 பேர் இணைந்துள்ளனர். இந்தவகையில் நாடாளாவிய ரீதியல் யாழ்.மாவட்டம் முதலாம் இடத்தில் உள்ளது.

2009 ஆம் ஆண்டில் மேலும் பலர் இணைந்துகொள்வார்கள் என்ற இலக்குடன் பிரதேச செயலர் பிரிவு வாரியாக வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கடந்த வருடம் சமூக பாதுகாப்பு ஓய்வூதிய வேலைத் திட்டத்தை சிறப்பான முறையில் முன்னெடுப்பவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கும் நிகழ்வு யாழ். செயலகத்தில் நடைபெற்றது. (ஓ-4)

# சுயதொழில் நிவாரண முதலாம் கட்ட கொடுப்பனவு

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்ட 11 பேருக்கு சுயதொழில் நிவாரண முதலாம் கட்ட கொடுப்பனவுக்கான அனுமதிகள் வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்பட் டுள்ளதாகவும் எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை பிரதேச செயலக சமூக சேவை கள் பிரிவிற்கு ஆள் அடையாள அட்டை, குடும்ப அட்டை சகிதம் வருகை தருமாறும் பிரதேச செயலர் கேட்டுக்கொள்கின்றார்.

கொடுப்பனவைப் பெறவுள்ளோர் விபரம் வருமாறு,

சி.தவமலர்-மீசாலை மேற்கு, ச.சாந்தி-மீசாலை வடக்கு, க.புவனேஸ்வரி- ஐயனார் கோவிலடி, கொடிகாமம், இ.இராஜேஸ்வரி-கோயிலாமனை-கொடிகாமம், பா.உமாதேவி - கண்டிவீதி- சாவகச்சேரி, வ.ஞானலக்சுமி - சரசாலை வடக்கு, சாவகச்சேரி, வே. வள்ளி நாயகி - தாவளை, இயற்றாலை, வரணி, ந-சாந்தி - உதயசூரியன் வீதி, சாவகச்சேரி, வ.கதிரவேலு - கைதடி தெற்கு , கைதடி, க. நாகம்மா- மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி, கோ.முத்துப்பிள்ளை-கச்சாய் வீதி, கொடிகாமம். (ஓ-29)

# நிக்கொட் அமைப்பின் அதிகாரிகள் யாழ்.குடாநாட்டுக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ் நிக்கொட் அமைப்பினால் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்திப் பணிகளை பார்வையிடுவதற்காக உயர்மட்டக் குழு ஒன்று நேற்று யாழ்ப்பாணத்திதிற்கு விஜயம் செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்தக் குழுவில் நிக்கொட் அமைப்பின் திட்ட முகாமையாளர் லங்காநேசன், செயற் திட்ட வல்லுநர் திருச்செல்வம் மற்றும் ஆலோசகர் கொடித்துவக்கு ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

இத் திட்டத்தின் கீழ் உரும்பிராய்ப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவு நேற்று பிற்பகல் 3 மணிக்கு உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இதனை ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி றிச்சார்ட் பொக்ஸ் திறந்து வைத்துள்ளார்.

அத்துடன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி மற்றும் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் ஆகியவற்றின் கட்டடங்கள் நாளை புதன்கிழமை மாணவர்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்படவுள்ளன. (ஓ-4)

## மாணவர்களது அறிவை மேம்படுத்தும் செயற்திட்டம்

(கல்வயல்)

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொதுநூலகத்தினர் மாணவர்களது அறிவை மேம்படுத்தும் செயற் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட தொடர் ஒன்றுக்கான பரீட்சையில் மட்டுவிலைச் சேர்ந்த செல்வி நிரோசா செல்வ ராசா முதலாவது இடத்தைப் பெற்றுள்ளார்.

தொடர் இரண்டுக்கான பரீட்சை மே மாதம் 10 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறும் என்று நூலகர் இ.தர்மலிங்கம் அறிவித்துள்ளார். (ஓ-31)

## ஏகாதசி பூஜை

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லிபுர நாதர் தேவஸ்தானத்தில் இன்று செவ்வாய்க்கிழமை ஏகதாசி விரத பூஜைகள் இடம்பெறவுள்ளது.

பிற்பகல் 3.30க்கு சங்கல்பத்துடன் ஆரம்பமாகி அபிஷேக ஆராதனைகளை அடுத்து சுவாமி உள்வீதி வலம் வரும் காட்சி இடம்பெறும். (ஓ-36)

## மெய்வன்மைப் போட்டி பொறுப்பாசிரியர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். வலயக் கல்வி அலுவலகத்தின் மெய்வன்மைப் போட்டிக்கான நிகழ்ச்சி நிரல், போட்டிக்கான இலக்கம் என்பவை நாளை புதன்கிழமை 12 மணிக்கு யாழ். ஆசிரியர் வள நிலையத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

எனவே போட்டிக்குப் பொறுப்பான ஆசிரியர்கள் தவறாது வருகை தருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ-30)

## கிரிக்கெட் பயிற்சியாளர்களுக்கான பயிற்சிப் பாசறை

இலங்கை கிரிக்கெட் சபையால் யாழ். மாவட்ட பாடசாலையச் சேர்ந்த கிரிக்கெட் பயிற்சியாளர்களுக்கான பயிற்சிப் பாசறை நேற்று திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திற்கு விஜயத்தை மேற்கொண்ட இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவர் டி.எஸ்.டிசில்வா மற்றும் பயிற்சி முகாமையாளர் மல்கம் பெரேரா உட்பட 10பேர் கொண்ட குழுவால் யாழ்.மாவட்டப் பாடசாலைகளை தலைமையேற்று வழிநடத்தும் யாழ்ப்பாண பாடசாலை அணிகளின் பயிற்சியாளர்களுக்கான பயிற்சிப் பாசறை நேற்று ஆரம்பமாகி நாளை புதன்கிழமை வரை யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இப் பயிற்சிப் பாசறையில் 40க்கு மேற்பட்ட பயிற்சியாளர்கள் கலந்துகொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது .(ஓ-7)

## கட்டடத் திறப்பு விழா

(அல்வாய்)

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத் திறப்பு விழா நாளை புதன்கிழமை காலை 10.30 மணிக்கு கல்லூரி அதிபர் சீலா சண்முகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை நிக்கொட் திட்டப் பணிப்பாளர் ரிச்சாட் பொக்ஸ் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக நிக்கொட் திட்ட முகாமையாளர் லங்காநேசன், யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், ஆசிய அபிவிருத்தி வங்கியின் திட்ட வல்லுநர் எம். திருச்செல்வம், ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆலோசகர் திருமதி சாந்தீபனி கொடித்துவக்கு, மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வரட்ணம், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, பருத்தித்துறை கோட்டக் கல்வி அதிகாரி பா.இரகுநாதன், பருத்தித்துறை பிரதேச செயலாளர், இ.வரதீஸ் வரன், பாடசாலை கட்டட பொறியியலாளர் ஜி.சிவ பாலன், நிக்கொட் திட்ட மாவட்ட பிரதிப் பணிப்பாளர் எஸ்.என். ஆர். சிவரூபன், நிக்கொட் திட்டப் பொறியியலாளர் கே.சசி கரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ-4-19)





வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட மரம் நாட்டு விழாவின் போது வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் மா.ஸ்ரீஸ்கந்தகுமார் உரையாற்றுவதையும், பயனாளி ஒருவருக்கு மரக்கன்று ஒன்றை வழங்குவதையும், மரம் நாட்டுவதையும் அருகில் சங்கப் பணியாளர்கள், சங்க அங்கத்தவர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# 250 அடி உயரத்திலிருந்து விழுந்து இரண்டு நாட்களின் பின் மீட்கப்பட்ட வயோதிபர்


டானியல்

(லண்டன்)

250 அடி உயரத்திலிருந்து விழுந்து காயமடைந்த நிலையில் இரு நாட்கள் கவனிப்பாரற்று இருந்த 87 வயது வயோதிபர் ஒருவர் உயிருடன் மீட்கப்பட்ட அதிசய சம்பவம் பிரித்தானியாவில் இடம் பெற்றுள்ளது. இரண்டாம் உலகப் போர் கால படைவீரரான டானியல் கர்ரி, பாலமொன்றில் சென்ற வேளை தவறிக் கீழே விழுந்துள்ளார்.

தோள் மூட்டும் முழங்கைகளும் உடைந்த நிலையில் 3 பாகை செல்சியஸிலும் குறை வான வெப்பநிலையில் அவர் இரு இரவுகளைக் கழித்துள்ளார். அவர் உதவிக்காக குரல் கொடுத்தபோதும் எதுவித பயனும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

டானியலின் கார் பாலத்தை அண்டிய பிரதேசத்தில் தொடர்ந்து இரு நாட்களாக கவனிப்பாரற்று நிற்பதை அவதானித்த பிரதேசவாசிகள், அவரது குடும்பத்தினருக்கு இது தொடர்பில் அறிவித்ததையடுத்தே அவர் பள்ளத்தில் விழுந்து கிடப்பது கண்டுபிடிக்கப்பட்டது. (ஓ-4)

# மத்திய ஆசியாவில் மாபெரும் இராணுவ பயிற்சி நிகழ்ச்சி

## ரஷ்யா, சீனா உட்பட 5 நாடுகள் பங்கேற்பு

(டாக்கா)

ரஷ்யா, சீனா மற்றும் மூன்று மத்திய ஆசிய பிராந்திய நாடுகள் கூட்டிணைந்து தஜிகிஸ்தானில் சனிக்கிழமை இராணுவப் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டன.

உலங்கு வானூர்திகள், இராணுவ விமானங்கள், பீரங்கிகள் சகிதம் ஆயிரத்துக்கும் அதிகமான படைவீரர்கள் இந்தப் பயிற்சி நடவடிக்கையில் கலந்து கொண்டனர்.

இதன்போது தஜிகிஸ்தான் எல்லையில் ஆப்கானிஸ்தானிலுள்ள போராளிகள் தாக்குதலை நடத்தும் பட்சத்தில் அதனை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பான பயிற்சியில் ரஷ்ய மற்றும் தஜிகிஸ்தான் நாடுகளைச் சேர்ந்த விசேட படையினர் பங்கேற்றனர்.

மேலும் சீனாவின் ஷங்காய் கூட்டுறவு அமைப்பின் பயிற்சியில் கஜகஸ்தான் மற்றும் கிர்கிஸ்தான் படையினர் பங்கேற்றனர்.

அத்துடன் இந்நிகழ்வில் பார்வையாளர்களாக இந்தியா, பாகிஸ்தான் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (ஓ-4)

# பங்களாதேஷ் பிரதமர் ஹசீனாவை கொலை செய்ய தீவிரவாதிகள் சதி

(டாக்கா)

பங்களாதேஷ் பிரதமர் ஹசீனாவை கொலை செய்ய தீவிரவாதிகள் சதித் திட்டம் தீட்டியிருப்பதாக இந்தியா எச்சரித்தது. இதைத் தொடர்ந்து அவருக்குப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. உளவுத் துறையும் பொலிஸாரும் உஷார்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் 2 நாள் பயணமாக இந்திய வெளிநாட்டு இலாகா செயலாளர் சிவ்சங்கர் மேனன், டாக்கா சென்று ஹசீனாவை சந்தித்து பேசினார்.

அப்போது அவர் இந்த சதித் திட்டம் பற்றி தெரிவித்ததாக கூறப்படுகிறது.

இதுபற்றி உட்துறை மந்திரி சஹாரா காட்டூன் நிருபர்களிடம் கூறுகையில், கடந்த காலத்தில் ஹசீனாவை கொல்ல 20 முறை முயற்சிகள் நடந்ததாகவும் அவை அனைத்தும் முறியடிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார். (ஓ-4)

# இந்தோனேஷியா - ஜப்பானில் பூகம்பம்

(ஜகார்தா)

இந்தோனேஷியா, ஜப்பான், ரஷ்யா ஆகிய நாடுகளில் நேற்று முன்தினம் காலை பூகம்பம் ஏற்பட்டது. அதன் வீரியம் ரிக்டர் அளவில் 6.4 ஆக இருந்தது.

இந்தோனேஷியாவில் கெபுலாவான் தலாத் என்ற பகுதியில் நேற்று முன்தினம் காலை 10.53 மணிக்கு பூகம்பம் தாக்கியது. இதில் உயிர்ச் சேதமோ பொருட் சேதமோ எதுவும் ஏற்படவில்லை. சுனாமி எச்சரிக்கை எதுவும் விடப்படவில்லை.

ஜப்பானில் உள்ள கொக்கைடோவுக்கு வடகிழக்கில் உள்ள குரில் தீவில் பூகம்பம் ஏற்பட்டது. இந்தத் தீவு மக்கள் அதிகம் வசிக்காத பகுதியாகும். ரஷ்யாவின் தூரகிழக்கு பிரதேசத்திலும் இதன் பாதிப்பு இருந்தது. (ஓ-4)

# ஒபாமாவின் சொந்த பணத்தில் வெள்ளை மாளிகை புதுப்பிப்பு

(நியூயோர்க்)

வெள்ளை மாளிகையை புதுப்பிக்கும் செலவுகளை ஒபாமா தம்பதிகள் தங்கள் சொந்த செலவிலேயே மேற்கொண்டுள்ளனர். அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றி பெற்று, வெள்ளை மாளிகையில் குடியேறும் தம்பதி, பொதுவாக மக்களின் வரிப்பணத்தில் அரசின் சொந்த செலவிலேயே அதைப் புதுப்பிப்பது வழக்கமாக உள்ளது. இதற்காக, அரசின் நிதியிலிருந்து 40 இலட்சம் ரூபாய் வரை அவர்கள் செலவிடுவது வழக்கம்.

ஆனால், பொருளாதார நிலையில் கடும் நெருக்கடியை அமெரிக்கா சந்தித்துள்ள நிலையில், வெள்ளை மாளிகையை புதுப்பிக்கும் செலவை தங்கள் சொந்தப் பணத்திலேயே ஒபாமா தம்பதி செலவிட்டு வருகின்றனர். இதற்காக மக்களின் வரிப் பணத்தையோ அல்லது அரசின் நிதியையோ ஒபாமாவின் மனைவி மிசேல் பயன்படுத்தவில்லை என்று, அவரது தகவல் தொடர்பாளர்



கமில்ல ஜான்ஸ்டன் தெரிவித்துள்ளார். சமீபத்தில், ஒபாமாவின் மகள்கள் பொழுது போக்குக்காக தெற்கு மாளிகைப் பகுதியில் உள்ள விளையாட்டு பூங்காவை மிசேல் புதுப்பித்துக் கொடுத்துள்ளார். வெள்ளை மாளிகையின் பல்வேறு பகுதிகளையும் புதுப்பிப்பதற்காக, ஹாலிவுட் அலங்கார நிபுணர் மிச்சேல் ஸ்மித்தை மிசேல் தேர்வு செய்துள்ளார். (ஓ-4)

# ஆறு கண்டங்களிலிருந்து அறுவருக்கு கோல்ட்மான் சுற்றுச்சூழல் விருதுகள்

(லண்டன்)

பூகோளத்தை பாதுகாக்க அரசாங்கங்கள் மற்றும் தொழிற்துறைகளை ஊக்குவிப்புச் செய்தவர்களுக்கான கௌரவ கோல்ட்மான் சுற்றுச்சூழல் விருதை ஆறு சுற்றுச் சூழல் பிரசாரகர்கள் ஞாயிற்றுக்கிழமை வென்றெடுத்துள்ளனர்.

இந்தப் பரிசானது நோபல் சுற்றுச் சூழல் பரிசுக்கு நிகரானதாகும்.

உலகின் 6 கண்டங்களிலுமிருந்து சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்கு பங்களிப்புச் செய்தவர்களைத் தெரிவுசெய்து கௌரவிக்கும் நோக்கில் இந்த விருது வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன் பிரகாரம் மேற்கு ஆபிரிக்காவைச் சேர்ந்த மார்க் ஒனா எஸங்குயி, வட அமெரிக்காவைச் சேர்ந்த மரியா கன்னோ, ஐரோப்பாவைச் சோந்த ஒல்கா ஸ்பொரன்ஸ்கயா, ஆசியாவில் பங்களாதேஷைச் சேர்ந்த றிஸ்வானா ஹஸன், தென் மற்றும் மத்திய அமெரிக்கப் பிராந்தியத்தைச் சோந்த ஹூகோ ஜபினி மற்றும் வன்ஸ் எட்வார்ட் ஆகியோர் இந்த வருடத்திற்கான சுற்றுச் சூழல் விருதை வென்றெடுத்துள்ளார்கள். (ஓ-4)

# சீனாவில் நிலக்கரிச் சுரங்க களஞ்சியசாலையில் வெடிப்பு சம்பவம்: 18 பேர் பலி; பலர் காயம்



சீனாவில் நிலக்கரி சுரங்கமொன்றின் அருகே வெடி பொருட்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்த களஞ்சியசாலையில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில், குறைந்தது 18 பேர் பலியானதுடன் பலர் காயமடைந்துள்ளனர்.

மத்திய சீனாவில் ஹுனான் மாகாணத்தில் இடம் பெற்ற இந்த வெடிப்பு சம்பவத்தையடுத்து மூன்று மாடி களஞ்சியசாலை முற்றுமுழுதாக சேதமடைந்துள்ளது.

இந்நிலையில் மேற்படி களஞ்சியசாலையில் வெடிபொருட்கள், சட்டத்துக்குப் புறம்பான வகையில் சேமித்து வைக்கப்பட்டிருந்தனவா என்பதைக் கண்டறிய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சீனாவில் கடந்த வருடம் நிலக்கரி சுரங்கங்களில் இடம்பெற்ற விபத்துக்களில் குறைந்தது 3ஆயிரத்து 200 பேர் பலியானமை குறிப்பிடத்தக்கது. (ஓ-4)

# 'பிரபாகரன் தீவிரவாதி அல்லர்' என கருணாநிதி கூறுவதற்கு தேர்தல் பயமே காரணம்

## கம்யூனிஸ்ட் செயலர் டி.ராஜா தெரிவிப்பு

பிரபாகரன் தீவிரவாதி அல்லர் என முதல்வர் கருணாநிதி கூறியுள்ளதற்கு தேர்தல் பயமே காரணம் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலர் டி.ராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களவைத் தேர்தலில் தமிழகத்தைப் பொறுத்தவரை இலங்கைப் பிரச்சினை ஒரு முக்கிய விடயமாக மாறியுள்ளது. இதனால் தான் இலங்கைப் பிரச்சினை தொடர்பாக தினமும் அறிக்கையோ அல்லது பேட்டியோ அளிக்கிறார் முதல்வர் கருணாநிதி.

இலங்கை அரசு போரை நிறுத்தாவிட்டால்,ராஜீய உறவுகளை மத்திய அரசு துண்டிக்க வேண்டும் என்று இரண்டு தினங்களுக்கு முன்பு கூறினார் முதல்வர் கருணாநிதி.

ஆனால், மத்திய அரசு அந்த நிலையை எடுக்கவில்லை. இதையடுத்து இப்போது புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் தீவிரவாதி அல்ல எனக் கூறுகிறார். விடுதலைப்புலிகள் தடைசெய்யப்பட்ட இயக்கமாகும்.

மத்திய அரசில் தி.மு.க. அங்கம் வகிக்கிறது.

இந்த நிலையில் விடுதலைப் புலிகளின் இயக்கத்தின் மீதான தடையை மத்திய அரசு நீக்க வேண்டும் என முதல்வர் கருணாநிதி ஏன் வற்புறுத்தவில்லை?

இலங்கைப் பிரச்சினையில் இலங்கைத் தமிழர்களுக்கு மத்திய அரசு துரோகம் செய்து விட்டது என தமிழக மக்கள் கருதுகின்றனர்.

எனவே தேர்தல் பயம் காரணமாகவே பிரபாகரனுக்கு ஆதரவாகப் பேசுகிறார் முதல்வர் கருணாநிதி. கருணாநிதியின் நிலைப்பாடு, முரண்பாடுகளின் மொத்த உருவமாக உள்ளது என்றார். (ஓ-4)

# ஜெயலலிதாவிற்கு பிரதமர் ஆவதற்கான எல்லா தகுதிகளும் உண்டு என்கிறார் வைகோ

(சென்னை)

பிரதமர் ஆவதற்கான எல்லாத் தகுதியும் ஜெயலலிதாவிற்கு இருக்கிறது என்று வைகோ கூறினார்.ம.தி.மு.க.தேர்தல் அறிக்கையை அக் கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ கட்சியின் தலைமையகமான தாயகத்தில் நேற்று முன்தினம் வெளியிட்டார்.

இதைத் தொடர்ந்து வைகோ நிருபர்களுக்கு பேட்டி அளித்த போதுகூறியதாவது, ம.தி.மு.க.தேர்தல் அறிக்கையை வெளியிட்டிருக்கிறோம். இது வெறும் தேர்தல் அறிக்கை மட்டும் கிடையாது. ம.தி.மு.க வின் செயல்திட்டமும் கூட. அதனால் இந்தத் தேர்தல் அறிக்கைக்கு ம.தி.மு.க.செயல் திட்ட வெளியீடு என்று பெயர் வைத்துள்ளோம்.

தேர்தலுக்குப் பிறகு பாரதீய ஜனதா கூட்டணியில் அ.தி.மு.க சேராது என்று ஜெயலலிதா தெரிவித்திருக்கிறார். எங்களின் நிலைப்பாடும் அதுதான். அ.தி.மு.க.பொதுச் செயலாளர் ஜெயலலிதாவிற்கு பிரதமர் ஆவதற்கான எல்லாத் தகுதிகளும் இருக்கிறது.

அவருக்கு பல மொழிகள் தெரியும். தெளிவான சிந்தனைவாதி. 3ஆவது அணி சார்பில் அவர் பிரதமர் ஆவதற்கான சூழ்நிலை வந்தால் அதற்கு நாங்கள் ஆதரவு தருவோம். இலங்கையில் போர் நிறுத்தம் வேண்டி இதுவரை 16 பேர் தீக்குளித்து இறந்து போய் இருக்கிறார்கள். அவர்களின் தியாகம் மக்களிடையே சென்று சேரவில்லை. ம.தி.மு.க. தலைமையகத்திலே 7 ஆவது நாளாக பெண்கள் உண்ணா விரதம் இருந்து வருகின்றனர். அவர்களில் சிலரின் உடல் நிலை மோசமாகி உள்ளது.

தேர்தலுக்காக, மக்களின் வாக்குகளை பெறுவதற்காக தி.மு.க இப்போது மத்திய அரசிடம் கோரிக்கை வைக்கிறது. இலங்கையின் உறவைத் துண்டிக்க வேண்டும் என்று. இதற்கு முன்பு ஏன் இதைச் சொல்லவில்லை. அங்கே பசி பட்டினியால், குண்டுமழையால் தமிழர்கள் செத்து மடிகிறார்கள்.ஆனால் இது வரை இலங்கையில் போரை நிறுத்த இந்தியா வலியுறுத்தவில்லை. உலக நாடுகள் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்த பிறகும், இந்திய அரசு ஒரு ஒப்புக்குக் கூட இலங்கை அரசை வற்புறுத்தவில்லை. இந்திய அரசின் இந்தத் துரோகத்தை தமிழர்கள் மன்னிக்கமாட்டார்கள் என்று தெரிவித்தார். (ஓ-4)



# தேனின் மருத்துவ குணங்கள்

தேன் என்ற வார்த்தையைக் கேட்டாலே அனைவரின் நாவிலும் எச்சில் ஊறும். இயற்கையின் கொடைகளில் தேனும் ஒன்று. பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பு நம் சித்தர்கள் தங்களின் தவப்பயனால் கண்டறிந்த சித்த மருத்துவத்தில் தேனை துணை மருந்தாகப் பயன்படுத்துகின்றனர். தேன் எத்தனை வருடங்கள் ஆனாலும் கெடாது. தன்னுடன் சேர்ந்த பொருட்களையும் கெடாமல் பாதுகாக்கும்.

சர்க்கரைக்கு பதிலாக தேனைப் பயன்படுத்தலாம். தேனில் குளுக்கோஸ், பிரக்டோஸ், சுக்ரோஸ் போன்ற சர்க்கரை பொருட்கள் உள்ளன. தேனில் பல வகைகள் உள்ளன. ஒவ்வொரு தேனுக்கும் தனித்தனி மருத்துவ குணங்கள் உண்டு.

**மலைத்தேன்**

இது மலைப் பகுதிகளில் பாறைகளின் இடுக்குகளிலும் பெரிய மரக்கிளைகளிலும் பெரும் கூடாக கட்டியிருக்கும். இந்த வகைத் தேன் அரிய மருத்துவ குணங்களைக் கொண்டது. சித்த மருத்துவத்தில் அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

நாள்பட்ட சளி, இருமல் போன்றவற்றிற்கும் உடலை வலுப்படுத்தவும், நோயுற்றவர்களுக்கு உடல் நலம் பேணவும் மலைத்தேன் சிறந்த மருந்தாகும். நல்ல குரல் வளத்தைக் கொடுக்கக்கூடியது.

**கொம்புத்தேன்**

மரங்களின் பொந்துகளில் கூடு கட்டும். இந்த தேனீக்கள் சிறிய கொசுவைப் போல் காணப்படும். இந்த வகையான தேன் கிடைப்பது மிகவும் அரிது.

**புற்றுத்தேன்**

கண் சம்பந்தப்பட்ட நோய்களைக் குணப்படுத்தும்.

**மனைத்தேன்**

இது வீடுகளில் கட்டுகின்ற தேன். பசியினைத் தூண்டும். உடலை வலுவாக்கும். கிருமி நாசினியாகவும் செயல்படுகிறது. பொதுவாக தேன் சிறந்த கிருமி நாசினி. புண்களை ஆற்றும். நெருப்பினால் உண்டான காயங்களை தணப்படுத்தவும் கொப்புளங்கள் ஏற்படாமல் இருக்கவும் இது பயன்படுகிறது.

**நல்ல தூக்கத்திற்கு**

இரவு படுக்கைக்கு செல்லு முன் தேன் - 2 கரண்டி பாலிலோ, அல்லது நீரிலோ கலந்து அருந்திவந்தால் நல்ல சுகமான உறக்கம் வரும்.

தேன் பற்களில் உண்டாகும். மஞ்சள் கறைகளை போக்கும். பற்களுக்கு பலம் தரும். தேனை தினமும் பல், ஈறுகளில் தடவி வந்தால் பற்கள் சுத்தமாகவும், பளிச்சென்று காணப்படும். பல் ஈறுகளில் நுண் கிருமிகள் வளருவதைத் தடுக்கும்.

தேனை வாய்ப்புண் மீது தடவினால் புண்கள் விரைவில் குணமாகும். வயதானவர்களுக்கு தேன் உடல் வலிமையையும், சக்தியையும் கொடுக்கும்.

**நீண்ட நாள் சளி நீங்க**

பூண்டு எண்ணெய் - 1கரண்டி, தேன் 3 கரண்டி கலந்து ஒரு நாளைக்கு மூன்று வேளை அருந்தி வந்தால் சளித்தொல்லை நீங்கும். தேனை அதிக அளவு எடுத்து குடிக்கக் கூடாது. சிறிது சிறிதாக எடுத்து உள்ளங்கையில் வைத்து நாவினால் நக்கி சாப்பிட்டால் உமிழ் நீருடன் தேன் சேர்ந்து உடலுக்குள் செல்கிறது.

**முகப் பொலிவிற்கு**

2 கரண்டி தேன் எடுத்து முகத்தில் தடவி 15 நிமிடங்கள் கழித்து கழுவி வந்தால் முகத்தில் உள்ள கழிவுகள் வெளியேறும். முகம் பொலிவு பெறும். (தேனை தடவும் போது உரோமத்தில் படாதவாறு தடவவேண்டும். உரோமத்தில் பட்டால் உரோமம் வெளுத்துப் போகும்.)

**வறண்ட சருமம் மென்மையாக**

தேன் - 1 கரண்டி, பால் 1 டம்ளர் இரண்டையும் குளிக்கும் நீரில் கலந்து குளித்து வந்தால் மேனி மென்மையாகவும் பளபளப்பாகவும் மாறும். தேன் 2 கரண்டி எடுத்து அதனுடன் பன்னீர் 100 மி.லீ கலந்து தோலின் மீது தடவினால் தோல் பளபளக்கும்.

**புதுத் தேன்**

நிறைந்த ஆயுளையும் அழகையும் கொடுக்கும். இதை அளவுக்கு அதிகமாக சாப்பிட்டால் நெஞ்சில் கபம் உண்டாகும்.

**பழைய தேன்**

இது புளிப்பும் இனிப்புமாயிருக்கும். இதனால் வாதப் பெருக்கம், வயிற்றெரிச்சல் உருவாகும். தேன் மருந்துகளுக்கு சிறந்த அனுபானமாக துணை மருந்தாகப் பயன்படும். தேன் இதயத்திற்கு ஒரு சிறந்த மருந்து. இது மார்புவலி, படபடப்பு ஆகியவற்றிற்கு நல்லது.

- தேன் எளிதில் சீரணமாகும். எனவே செரியாமையைத் தீர்க்க கிடைத்த வரப்பிரசாதம்.
- தேன் இரைப்பையில் அதிக அமிலம் சுரப்பதை குறைக்கும். பசியின்மை வாய் குமட்டல், நெஞ்செரிச்சல் என்பவற்றைக் குணமாக்கும்.
- இது சிறந்த மலமிளக்கியாக செயல்பட்டு குடலில் உள்ள கழிவுப் பொருட்களை வெளியேற்றும்.
- வெது வெதுப்பான நீர் அரை டம்ளர் எடுத்து அதில் தேன் 1 கரண்டி, எலுமிச்சை பழச்சாற்றை சிறிது கலந்து காலையில் அருந்த வயிறு எரிச்சல் குணமாகும். மலச்சிக்கல் தீரும்.
- இரத்தத்தில் உள்ள சிவப்பு அணுக்களை அதிகப்படுத்த தேனே சிறந்த மருந்தாகும்.
- தேனில் அதிகளவு இரும்புச் சத்து. செம்பு, மங்கனீஸ் உள்ளது. வெளுப்பு நோயைக் குணமாக்கும்.
- நுரையீரல் சம்பந்தமான நோய்களைக் குணமாக்கும்.
- இது சிறந்த கோழையகற்றி ஆஸ்துமா உள்வர்களுக்கு சிறந்தது.
- ஆஸ்துமா நோயாளிகள் 1 டம்ளர் வெது வெதுப்பான வெந்நீரில் 1 கரண்டி தேன் கல ந்து பருகி வந்தால் வறட்டு இருமல், ஆஸ்துமா குணமாகும்.

# கண்களை காக்கும் காய்கறிகள்

பொதுவாக உடல் ஆரோக்கியத்திற்கு காய்கறிகள் மிகவும் அவசியம். அதனால் தான் மருத்துவர்கள் உணவில் அதிக அளவில் காய்கறிகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்துகின்றனர். நாம் அன்றாடம் உண்ணும் உணவிலேயே கண்களைப் பாதுகாக்கும் விஷயங்கள் அடங்கி உள்ளன.



பச்சைக் காய்கறிகளில் விற்றிமின் ஏ மற்றும் விற்றமின் சியும், இரும்பு மற்று கல்சியம் சத்துகளின் முதன்மை ஆதாரங்களும் அடங்கி உள்ளன. இவை கண்களுக்கு மிகவும் நல்லது. தினமும் எதாவது ஒரு கீரை வகை சேர்ப்பது உடல் நலத்துக்கு ஏற்றது.

குறைந்த பட்சம் வராத்திற்கு இரண்டு தடைவையாவது கீரை சேர்க்க வேண்டும் அகத்திக் கீரை, பசளிக் கீரை, முருங்கை, பொன்னாங்கன்னி, முளைக்கீரை, அரக்கீரை, வெந்தயக் கீரை ஆகிய கீரைகளில் இரும்பு, போலிக் அசிட், மற்றும் விற்றமின் பி ஆகிய சத்துக்கள் அடங்கியிருப்பதால் இவற்றை அதிகம் சேர்த்துக் கொள்வது நல்லது.

பச்சைக் காய்கறிகளுடன் சாலட் மற்றும் எலுமிச்சை நம் பார்வையை பெரிதும் கூர்மையாக்குகிறது. விற்றமின் ஏ யில் கண்ணையும். மூளையையும் இணைக்கும் முக்கிய சத்து அடங்கியுள்ளது. கண் விழித்திரையிலுள்ள ரோடோஸ்பின் என்ற புரதத்தில் விற்றமின் ஏ உள்ளது. பார்வையில் இது முக்கிய பங்கு வகிக்கின்றது.

விற்றமின் ஏ சத்து பற்றாக்குறையால் முதலில் தோன்றும் அறிகுறி மாலைக்கண் நோய். கரட்டில் அதிகமான விற்றமின் ஏ உள்ளது. அதிநிற பழங்களிலும், பச்சைக் காய்கறிகளிலும் விற்றமின் ஏ உள்ளது.

தக்காளி, பசளி, ஈரல், முட்டை, நிறமயமான காய்கறிகள், கரட், பப்பாளி மற்றும் பச்சை இலைகளில் உள்ளது. உடலில் அதிகமாக சுரக்கும் குளுக்கோஸினால் கண் லென்ஸ் சேதமடைவதிலிருந்து புரத அமிலங்கள் நம்மை காக்கின்றன.

இறைச்சி, மீன் மற்றும் பாலில் நமக்குத் தேவையான 8 முக்கிய அமினோ அமிலங்கள் உள்ளன. அரிசி, பட்டாணி, பீன்ஸ், அவரை, மொச்சை, துவரை, உளுந்து, பயறு போன்றவற்றில் இறைச்சியில் உள்ள அளவுக்கு அமினோ அமிலங்கள் உள்ளன.




# நீரிழிவு நோயை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு...

(7ஆம் திகதியின் தொடர்ச்சி)

**மதுபானங்கள் பருகலாமா?**

மதுபானங்களை அறவே அருந்தாமல் இருத்தல் நல்லது. ஆனால் ஏன் இந்த அறிவுரையை கேட்கிறார்கள்? அதனால் குடித்தே ஆக வேண்டும் என்று நிர்ப்பந்தம் வரும் பொழுது ஒரு கட்டுப்பாட்டுடன் அருந்தினால் அவ்வளவாக பாதிப்பு இராது. அவையாவன.

1. சாப்பாட்டிற்கு பிறகுதான் அருந்த வேண்டும்.
2. 60 மி.லீ மேல் பாவிக்கக் கூடாது. அது விஸ்கி, அல்லது ரம், அல்லது பிராந்தியாக இருக்கலாம்.

**என்னென்ன காய்கறிகள் சாப்பிடக் கூடாது?**

காய்கறிகளில் கிழங்கு வகைகள் தவிர மற்ற எல்லா வகையான காய்கறிகள், கீரைகள் நிறைவாக சாப்பிட்டு வயிற்றை நிரப்பிக் கொள்ளலாம். கிழங்கு வகைகளுக்கு உதாரணமாக உருளைக்கிழங்கு, கருணைக்கிழங்கு, சட்டிக்கிழங்கு, சேப்பங்கிழங்கு, மரவள்ளி கிழங்கு ஆகியவற்றைக் கூறலாம். கரட் மற்றும் பீற்றூட் போன்ற காய்கறிகள் வாரம் ஒரு முறை சாப்பிடலாம்.

**என்னென்ன காய்கறிகள் சாப்பிடலாம்?**

கீழே எழுதியிருக்கும் காய்கறிகள் அனைத்தையும் படிப்படியாகவே சாப்பிடலாம்.

பீன்ஸ், பாகற்காய், கோவக்காய், சுரைக்காய், கத்தரிக்காய், காலி பிளவர், முட்டைக் கோஸ், கொத்தவரக்காய், சௌ-சௌ, காராமணி, முருங்கைக்காய், குடைமிளகாய், வெண்டக்காய், வாழைப்பூ, வாழைத்தண்டு, பீர்க்கங்காய், பூசணிக்காய், முள்ளங்கி, புடலங்காய், தக்காளி மற்றும் எல்லா வகையான கீரைகளும்.

**சாப்பிடக்கூடாத பழங்கள் யாவை?**

முடிந்தவரை சாப்பிடக்கூடாத பழவகைகள் என்று கூறப்படுவது மாம்பழம், வாழைப் பழம், பலாப்பழம், பேரிச்சம்பழம், சீதாப்பழம், சப்போட்டா பழம் முதலியனவாகும். மேற் சொன்ன பழங்களைத் தவிர மற்றப் பழங்கள் ஒரு அளவோடு சாப்பிடலாம். பழங்களின் தோல் கசப்பாக இல்லாத பட்சத்தில் அவைகளை தோலுடன் சாப்பிடலாம்.

**செயற்கை சர்க்கரையை உபயோகிக்கலாமா?**

அளவோடு பாவித்தால் பிரச்சினையில்லாமல் உபயோகிக்கலாம். இவை மாத்திரையாகவும் பொடியாகவும் கிடைக்கிறது. இதை எலுமிச்சை மற்றும் தக்காளி வகைகளில் சேர்த்துக் கொள்ளலாம். பானங்களில் நாம் அருந்தக்கூடிய சூட்டில் இருக்கும் போது சேர்த்துக் கொள்ளலாம். செயற்கை சர்க்கரையாக உபயோகிப்பர் அவ்வளவு எளிதில் இனிப்பு பண்டங்களுக்கு மயங்கமாட்டார்கள்.

**உப்பு, காரம் சமையலில் சேர்த்துக் கொள்ளலாமா?**

சீனியுடன் இரத்த அழுத்தமும் சேர்ந்து இருந்தால் உப்பையும், உப்பு அதிகம் உள்ள கருவாடு, பப்படம், ஊறுகாய், மோர் மிளகாய் போன்றவற்றை நன்றாகக் குறைத்துக் கொள்வது நல்லது. வயிற்று புண் இல்லாமல் இருந்தால் ஒரு அளவோடு காரம் சேர்த்துக் கொள்ளலாம்.

**உணவுக் கட்டுப்பாட்டினால் நீரிழிவு உள்ளவர்களுக்கு கிடைக்கும் நன்மைகள் என்ன?**

1. நீரிழிவை கட்டுப்பாட்டில் வைத்திருக்க உதவுகிறது.
2. நீரிழிவினால் ஏற்படும் பின்விளைவுகள் வராமல் தடுக்க உதவுகிறது.
3. நீரிழிவுக்காக சாப்பிடும் மாத்திரை மற்றும் இன்சுலின் ஊசியின் அளவை குறைக்க உதவுகிறது.
4. சீரான உடல் உடை இருக்க கை கொடுக்கிறது.
5. இரத்தத்தில் உள்ள கொழுப்பின் அளவைக் குறைக்கிறது.
6. நீரிழிவு இருந்தும் ஆரோக்கியமாக இருக்க வழி வகுக்கிறது.

(முற்றும்)

# சுறுசுறுப்பாக செயல்பட...

ஒரு பொருளைப் பயன்படுத்திக் கொண்டே இருந்தால்தான் எளிதில் கெட்டுப் போகாது. மாறாக, அதை பயன்படுத்தாமல் ஒரு மூலையில் போட்டுவிட்டால் மாசு படிந்து கெட்டுப் போய்விடும். இது போன்றது தான் மூளையின் செயல்பாடும் என்று கண்டுபிடித்து இருக்கிறார்கள் அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள்.

இதற்காக 70 முதல் 89 வயது வரையிலான 197 பேரைத் தேர்ந்தெடுத்து ஆய்வு மேற்கொண்டனர். அவர்களது மூளை செயல் திறன் எந்த அளவுக்கு இருக்கிறது என்று ஆராய்ந்தார்கள்.

அன்றாடம் அவர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள், 50 முதல் 65 வயது வரையில் அவர்களது வாழ்வில் நடந்த நிகழ்ச்சிகள் பற்றி கேள்விகள் கேட்டனர்.

சிலர் சரியான தகவல்களைச் சொன்னார்கள். இன்னும் சிலர் எல்லாம் மறந்து போய் விட்டதாகச் சொன்னார்கள். மேலும் சிலரால் மேலோட்டமாக மட்டும் பதில் சொல்ல முடிந்தது.

சரியாகப் பதில் சொன்னவர்களின் பழக்க வழக்கங்கள் பற்றிக் கேட்ட போது, அவர்கள் புத்தகம் வாசிப்பது, கைத்திறன் வேலைகள் செய்தல், விளையாடுதல், கம்ப்யூட்டர் இயக்குவது போன்றவற்றில் ஆர்வம் கொண்டிருந்ததாகச் சொன்னார்கள்.

இது பற்றி ஆராய்ச்சியாளர்கள் கூறும் போது, புத்தகம் வாசிப்பது போன்ற மூளைக்கு வேலை கொடுக்கும் செயல்களை அளவுக்கு அதிகமாக அல்லாமல், தேவையான அளவு மேற்கொள்ளும் போது முதுமையில் வரும் ஞாபக சக்தி இழப்பு ஓரளவு தடுக்கப்படுவது தெரிய வந்துள்ளது என்றனர்.

நீங்களும் மூளைக்கு கொஞ்சம் வேலை கொடுத்துப் பார்த்தால் நிச்சயம் சுறுசுறுப்பாக செயல் படுவீர்கள். ஞாபக மறதிக்கும் குட்-பை சொல்லிவிடலாம். +++

கண்ணீரின் மொழி அழுத கண்களை உடைய வனுக்கு மட்டும்தான் தெளிவாகப் புரியும்.

– இந்தியா

வலம்புரி

## கொடுஞ் செய்தி கேட்டு குருதி கொதித்து இதயம் எரிகிறது

வன்னியில் நேற்றைய தினம் மட்டும் ஆயிரத்து ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர் என்ற கொடுஞ் செய்தி கேட்டு குருதி கொதித்து இதயம் எரிகிறது.

இந்த நாட்டில் தமிழ்மக்கள் வாழ்வதற்கே உரிமையில்லாதவர்களா? அவர்களை எது வேண்டுமானாலும் செய்யலாமா? என்ற கேள்விகள் நெஞ்சைத் துளைக்கின்றன.

நாள்தோறும் நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் பலியாகிய நிலையில் நேற்றைய தினம் ஆயிரத்து ஐந்நூற்றுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர் என்ற செய்தி தமிழ் இனத்தின் இருப்பை கேள்விக்குறியாக்கியுள்ளது.

உலக நாடுகள் எவற்றினாலும் இந்தப் படுகொலைகளை தடுக்க முடியாமல் போனமை வேதனையிலும் வேதனை.

சுமார் இரண்டு இலட்சம் தமிழ்மக்கள் போர்க்களத்தில் சிக்குண்டுள்ளனர்.

இவர்களைப் பாதுகாப்பது அனைத்து தரப்பினரதும் கடமையாகும்.

குறிப்பாக மக்கள் தஞ்சம் புகுந்துள்ள பிரதேசங்களை கைப்பற்றுவதற்கு எத்தனிக்கும் அரச படைகள் பொதுமக்களின் பாதுகாப்புத் தொடர்பில் அதீதகவனம் செலுத்த வேண்டும்.

ஆனால் பொதுமக்களின் பாதுகாப்பு விடயத்தில் அரசு–படைத்தரப்பு எந்தவிதமான ஏற்பாடுகளையும் செய்யாமல் கண்டபாட்டில் நடந்து கொள்கிறது.

இத்தகையதோர் பேரவலம்–படுகொலைத் துன்பம் சிங்கள மக்களுக்கு ஏற்படுமாக இருந்தால் அதனை அரசு ஜீரணித்துக் கொள்ளுமா? அல்லது சர்வதேச சமூகம் ஏற்றுக் கொள்ளுமா? மனித நேயத்தின் அடிப்படையில் அதனை யாராலுமே ஏற்றுக் கொள்ள முடியாது.

இதேநிலை தமிழ்மக்கள் தொடர்பிலும் இலங்கை அரசிடம் இருக்க வேண்டும். பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களை கொன்றொழித்துவிட்டு இலங்கையில் இன ஒற்றுமையை ஏற்படுத்துவது என்பது எங்ஙனம் சாத்தியமாகும்?

இலங்கை அரசு நினைப்பது போல யுத்தம் முடிந்தவுடன் இன ஒற்றுமையை ஏற்படுத்துவதாக இருந்தால்,தமிழ் மக்களின் உயிர் பாதுகாக்கப்படவேண்டும்.

பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களை பலியெடுத்தபின்னர் இன ஒற்றுமை,தமிழ் மக்களுக்கான உரிமை என்பன அர்த்தமற்றதாகி விடும். மனித உரிமை என்பது வாழும் விருப்போடு சம்பந்தப்பட்டது. வாழ்வதற்கே விருப்பம் இல்லாத போது,உறவுகளை இழந்த சோகம் வதைக்கும் போது உரிமை யாருக்குத்தேவை?

எதுவாயினும் இலங்கை அரசு தமிழ் மக்களின் உயிரைப்பாதுகாக்க தவறுமாயின் அதன் பாவபழி நிச்சயம் இந்தநாட்டை நின்றறுக்கவே செய்யும். இது உறுதி.

# எம் மக்களை காப்பாற்றுவதற்கு யாருக்கும் வலிமை இல்லையே

## தமிழகம் சென்ற இலங்கை அகதி தெரிவிப்பு

(கொழும்பு)

எம் மக்களை காப்பாற்றுவதற்கு முன்வர யாருக்கும் வலிமை இல்லையே. மக்கள் சாவதைப் பார்த்தக் கொண்டு இருக்க முடியவில்லை.

இவ்வாறு கடந்த சனிக்கிழமை வன்னிப் பகுதியில் இருந்து தமிழகம் சென்ற இலங்கை அகதி கண்ணீர் மல்க கூறினார். இலங்கையில் விடுதலை புலிகளுக்கும், இராணுவத்திற் கும் இடையே நடைபெற்று வரும் போர் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது.

இதனால் அப்பாவி தமிழர்கள் பதுங்கு குழிகளில் வாழ்க்கை நடத்தி வரும் அவலம் உள்ளது. மேலும் பாதுகாப்பு பகுதிகளிலும் இலங்கை இராணுவம் குண்டுகளை கொத்து கொத்தாக வீசி வருவதால் உயிருக்கு பயந்து போய் அப்பாவி தமிழ்மக்கள் படகு மூலம் தமிழகத்திற்கு அகதிகளாக வந்து கொண்டு இருக்கின்றனர்.

இந்த நிலையில் கடந்த சனிக்கிழமை இரவு இரட்டை என்ஜின் பொருத்தப்பட்ட கண்ணாடி இழைப் படகில் 5 ஆண்கள், 4 பெண்கள், 2 குழந்தைகள் என 11 பேர் அகதிகளாக வேளாங்கண்ணி புதிய கடற்கரையில் வந்து இறங்கினர். இந்த தகவலை அறிந்து வேளாங்கண்ணி பொலிஸார், அந்த 11 அகதிகளையும் பொலிஸ் வானில் ஏற்றிக் கொண்டு நாகைக்கு வந்தனர்.

தீவிர விசாரணை நடத்தியதில் இவர்கள் அனைவரும் விடுதலை புலிகள் அல்ல என்பது தெரியவந்தது.

மேலும் முல்லைத்தீவில் இருந்து அதிகாலை 4.30 மணிக்கு படகில் புறப்பட்டு சுமார் 15 மணி நேர பயணத்திற்கு பின்பு வேளாங் கண்ணி வந்தது தெரியவந்தது.

அதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் காலை 11 பேரையும் பொலிஸார் பலத்த பாதுகாப்புடன் மண்டபம் அகதிகள் முகாமிற்கு கொண்டு சென்றனர்.

அகதியாக வந்த ரொபேர்ட் சன் நிருபர்களிடம் கூறியதாவது,

இலங்கை இராணுவம் விமானங்கள் மூலமாகவும், பீரங்கி மூலமாகவும் குண்டுகளை கொத்து கொத்தாக எம் மக்கள் மீது வீசி வருகிறது. இதனால் மக்கள் அனைவரும் பதுங்கு குழிகளில் தங்கி, வாழ்ந்து வருகின்றனர். எந்தநேரமாக இருந்தாலும் சரி பதுங்கு குழியைவிட்டு வெளியே வரவே முடியவில்லை. எப்போதும் குழிக்குள்ளேயே இருக்கக்கூடிய நிலை உள்ளது.

கடுமையான சண்டை நடப்பதால் எங்கள் கண்முன்பே எம் மக்கள் சொத்து மடிகின்றனர். பார்ப்பதற்கே பயங்கரமாக இருக்கிறது. பயந்து கொண்டே வாழ வேண்டிய சூழ்நிலை உள்ளது. எம் மக்களை காப்பாற்றுவதற்கு முன்வர யாருக்கும் வலிமை இல்லையே. மக்கள் சாவதைப் பார்த்துக் கொண்டு இருக்க முடியவில்லை.

இதனால் அதிகாலை 4.30 மணிக்கு படகில் புறப்பட்டோம். வேளாங்கண்ணிக்குத் தான் வர வேண்டும் என்று எண்ணி வரவில்லை.

இந்தியாவில் எங்காவது ஓரிடத்திற்குச் செல்ல வேண்டும் என்று தான் புறப்பட்டோம். ஆனால் வேளாங்கண்ணிக்கு வந்துள்ளோம். இவ்வாறு அவர் கண்ணீர் மல்க கூறினார்.

(ஓ-4)

# கனடா தலைநகர் ஒட்டாவாவில் வரலாறு படைக்கப்போகும் உரிமைப் போர்

(கொழும்பு)

கனடிய தமிழ் மாணவர் சமூகமும் கனடியத் தமிழர் சமூகமும் கனடியத் தலைநகர் ஒட்டாவாவில் இணைந்து *மாபெரும் உரிமைப் போர் பேரணி* நடத்த ஏற்பாடு செய்துள்ளனர்.

✦ தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும், சுயநிர்ணய உரிமையையும், அங்கீகரிக்க வேண்டும்.

✦ ஆக்கிரமிப்பு இராணுவம் தமிழர் தாயகத்திலிருந்து வெளியேற்றப்பட வேண்டும்.

✦ தமிழீழ மக்களை அவர்கள் நிம்மதியாக வாழ விரும்பும் அவர்களின் பூர்வீக நிலங்களிலிருந்து வெளியேற்ற அனுமதிக்கக்கூடாது.

✦ உடனடி யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்படுவதுடன், வன்னி வாழ் மக்களின் உடனடித் தேவையான உணவு, மருத்துவ உதவிகள் சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும்.

ஆகிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உரிமைப் பேரணி ஒட்டாவா பாராளுமன்ற முன்றலில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது.

மக்கள் பேரெழுச்சி கொண்டுள்ளதால் பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொள்வர் என கனேடிய தேசிய ஊடகங்கள் எதிர்வு கூறுகின்றன.

தமிழர் வர்த்தக நிலையங்கள் மற்றும் சேவை நிறுவனங்கள் என்பன இன்று செவ்வாய்க்கிழமை தமது நிறுவனங்களை மூடுவதாக தீர்மானித்துள்ளனர்.

இந்நிகழ்வில் கனேடிய ஆளும், எதிர்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் மந்திரிகளும் மற்றும் விசேட பிரதிநிதிகளும் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஓ-4)

# தேசிய பிரச்சினையில் நோர்வேயின் பங்களிப்பு தொடர்பாக பாராளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும்

## தேசிய சுதந்திர முன்னணி கோரிக்கை

(கொழும்பு)

நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் உள்ள இலங்கைத் தூதரகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பாகவும், தேசியப் பிரச்சினையில் நோர்வேயின் பங்களிப்பு தொடர்பாகவும் நாடாளுமன்றத்தில் விவாதம் ஒன்று நடத்தப்பட வேண்டும் என ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக்கட்சியான தேசிய சுதந்திர முன்னணி கோரியுள்ளது.

இது தொடர்பாக சபாநாயகர் டபிள்யூ. ஜே. எம். லொக்கு பண்டாரவுக்கு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

நோர்வேயின் தலையீடு பற்றி விவாதிக்கப்படுவது தற்போதைய கால கட்டத்தில் அவசியம் என்பதால் அதற்கான நேரத்தை ஒதுக்குமாறு இக்கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட விமல் வீரவன்ச, நோர்வேயுடனான இராஜதந்திர உறவுகளை இலங்கை முற்றாகத் துண்டித்துக் கொள்ள வேண்டும் என்பது தான் தம்முடைய நிலைப்பாடு எனவும் தெரிவித்தார். (ஓ-4)

## ஏ9 வீதி ஊடான போக்குவரத்தில் தாமதங்கள்

(கொழும்பு)

யாழ்ப்பாணம் – கண்டி ஏ9 வீதி திறக்கப்பட்டுள்ள போதும் இதுவரை 56 பாரவூர்திகள் மாத்திரமே போக்குவரவு செய்யப்பட்டுள்ள நிலையில் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி உரிய வகையில் கிடைக்காமையே இதற்கான காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திற்கு ஏ9 வீதியின் ஊடாக செல்லும் பாரவூர்திகள் முதலில் வெலிசறையில் உள்ள இராணுவ களஞ்சியத்திற்கு கையளிக்கப்படுகின்றன.

இந்நிலையில் விரைவில் 18 பாரவூர்திகள் யாழ்ப்பாணத்திற்கு செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் இதற்கான உறுதியான திகதி எதுவும் தெரியவில்லை. (ஓ-6)

## சுவாமி விவேகானந்தரின் வீர முரசு

## தொண்டு



கீழ்ப்படிவதை அறிபவனே கட்டளையிடவும் அறிவான். முதலில் கீழ்ப்படியக் கற்றுக்கொள். ஒன்றாகக் கூடி வாழ்வதே நமக்கு வேண்டுவது. சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை. அதன் இரகசியம் கீழ்ப்படிதலே.

மக்களுக்கு உதவி செய்ய எண்ணுபவர்கள் தமது சொந்த சுகதுக்கங்களையும் புகழையும் எல்லாவகை ஆசைகளையும் மூட்டை கட்டிக் கடலில் எறிந்து விட்டுப் பின் இறைவனிடம் வரவேண்டும். மகான்கள் அனைவரும் சொன்னதும் செய்ததும் இதுவே. எல்லாக் கேடுகளுக்கும் முக்கிய காரணம் பிரிவு மனப்பான்மையே. எனது சகோதரர்களுக்கு நான் உதவுவேனாக! நான் தேடுவதெல்லாம் இதுவே.

# முல்லையில் காயமடையும் மக்களுக்கு சிகிச்சையளிக்க போதிய மருந்துகள் இல்லை

## அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம் தெரிவிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள மக்களுக்குச் சேவையாற்றி வரும் அரசாங்க மருத்துவர்கள் மிகவும் களைப்படைந்துள்ளதாக அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்திருக்கின்றது.

இந்தப் பகுதியில் இடம்பெறும் போரினால் காயமடையும் ஆயிரக்கணக்கான மக்களுக்குச் சிகிச்சையளிப்பற்குத் தேவையான மருந்துகள் இல்லாது உள்ளதுதான் தாம் எதிர்கொள்ளும் பிரதான பிரச்சினையாக உள்ளது எனவும் செஞ்சிலுவைச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தப் பகுதியில் இருந்து தரைவழியாக வெளியேறும் மக்களுக்கு பணியாற்றுவதற்கு தாம் விரும்புவதாகவும், இருந்தபோதிலும் அதற்கான அனுமதி தமக்குக் கிடைக்கவில்லை எனவும் செஞ்சிலுவைச் சங்கம் குறிப்பிட்டிருக்கின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கடற்கரைப் பகுதியில் உள்ள ஒரு சிறிய பகுதியில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் இருப்பதாகத் தெரிவித்துள்ள செஞ்சிலுவைச் சங்கம் அவர்களின் வாழ்க்கை ஆபத்தானதாகவே உள்ளதாகவும் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

இந்தப் பகுதியுடன் தரைவழியான தொடர்புகள் எதுவும் செஞ்சிலுவைச் சங்கத்துக்கு இல்லாமையால் கடல் வழியாக மக்களை வெளியேற்றும் நடவடிக்கைகளை செஞ்சிலு



வைச் சங்கம் மேற்கொண்டு வருகின்றது.

வாராந்தம் இரண்டு அல்லது மூன்று தடவைகளில் 400 அல்லது 500 பேர்களாக கப்பல்கள் மூலம் நோயாளிகள், வயதானவர்கள் மற்றும் மோசமான நிலையில் காயமடைந்தவர்கள் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆதரவுடன் வெளியேற்றப்படுகின்றனர்.

"இங்குள்ள நிலைமைகள் மிகவும் மோசமானதாக உள்ளது" எனக் குறிப்பிடும் செஞ்சிலுவைச் சங்கத்தின் முக்கிய பணியாளரான போல் கஸ்ட்டலா, "தற்போதைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இங்குள்ள மருத்துவ வசதிகள் போதுமானதாக இல்லை" எனவும் தெரிவித்தார்.

"சுகாதார அமைச்சைச் சேர்ந்த மருத்துவர்கள் இப்போதும் இங்கு பணிபுரிகின்றார்கள்" எனக் குறிப்பிடும் அவர், இந்த மருத்துவர்கள் மாதக்கணக்காக இரவு - பகலாக எந்த விதமான இடைவெளியும் இல்லாமல் பணிபுரிவதால் மிகவும் களைப்படைந்து விட்டனர்.

அத்துடன் மருத்துப் பொருட்களின் விநியோகமும் மிகவும் குறைவாகவே இருக்கின்றது எனத் தெரிவித்தார். (ஓ-4)

## நாணய நிதியத்தின் கூட்டத்தில் இலங்கை பிரதிநிதிகள் பங்கேற்பர்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் இலங்கை பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளனர்.

அமைச்சர் சரத் அமுனுகம, மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் உள்ளிட்ட முக்கியஸ்தர்களே இந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் பொதுக் கூட்டம் நியூயோர்க்கில் நாளை மறுதினம் வியாழக்கிழமை முதல் 25 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடம் 19 ஆயிரம் கோடி ரூபாவை கடனாக கோரியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (ஓ-4)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். இலங்கை
வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

**திசைமுகப்படுத்தும் நிகழ்வு (Orientation Programme) -2009**

**கலைமுதற்தேர்வு**

**கல்வியாண்டு 2006/2007 மற்றும் 2007/2008**

மேற்படி இரு கல்வியாண்டுகளிலும் கலை முதற்தேர்வுக்கு பதிவு செய்த மாணவர்களுக்காக 25.04.2009 தொடக்கம் 31.05.2009 வரை சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் பொது விடுமுறை நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 2.30 வரை திசைமுகப்படுத்தும் நிகழ்வொன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடாத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இந் நிகழ்வில் தவறாது க்ல்ந்துகொண்டு பயன்பெறுமாறு அழைக்கப்படுகின்றீர்கள்.

மேற்படி நிகழ்வு தொடர்பான நேர அட்டவணையை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் அலகுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் 021-222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளவும்.

**பதிவாளர்**
**20.04.2009**

(C/2391)


## அரசு திறைசேரி உண்டியல்களை விற்று 150 ஆயிரம் மில்லியன் ரூபாவை திரட்ட முயற்சி

### விரைவில் பாராளுமன்றத்தில் அங்கீகாரம் கோரப்படும்

(கொழும்பு)

அரசாங்கம் திறைசேரி உண்டியல்களை விற்று 150 ஆயிரம் மில்லியன் ரூபாவை திரட்டுவதற்கான முயற்சிகளை மேற் கொண்டு வருகின்றது.

திறைசேரி உண்டியல்களை உள்நாட்டிற்குள் விற்பதன் மூலமாகவே இத்தொகையை பெற்றுக் கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பெரும்பாலும் இவ்வாரத்திற்குள் இதற்கான அங்கீகாரத்தை அரசாங்கம் சபையில் கோரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரின் சார்பில் நிதி திட்டமிடல் அமைச்சின் ஊடாகவே பாராளுமன்றத்தில் இதற்கான அங்கீகாரம் கோரப்படவுள்ளது.

உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரேரணை மூலமாக திறை சேரி உண்டியல்கள் மூலம் 150 ஆயிரம் மில்லியன் ரூபாவிற்கு மேற்படாத தொகையை கடனாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஓ-4)


# உடனடி வேலைவாய்ப்பு

இலங்கை காப்புறுதி வரலாற்றில் கடந்த 23 வருடங்களாக சிறப்பான சேவையினை வழங்கிவரும் யூனியன் அஷ்யூரன்ஸின் யாழ்.பிரதான கிளைக்கும் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள கிளைக்கும் 18 வயதிற்கு மேற்பட்ட இருபாலாரிடமும் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன.

**பதவிகள்**

* Insurance Advisor
* Personal Financial Advisor
* Senior Personal Financial Advisor
* Personal Financial Manager

**தகைமைகள்**

- க. பொ.த. சாதாரணம் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி
- க.பொ.த. உயர்தரம் சித்தி (பதவிகள் 3, 4)
- முன் அனுபவம் விரும்பத்தக்கது (முக்கியம் அல்ல)

**சலுகைகள்**

- வரையறுக்கப்படாத ஊதியம்.
- திறமைக்கு ஏற்ப விரைவான பதவி உயர்வுகள்
- மாதாந்த வருடாந்த போட்டிகளில் பங்குபற்றி பரிசில்களைப் பெறும் வாய்ப்பு
- இலவச வெளி நாட்டு சுற்றுலா பயணங்கள்
- இலவச ஆயுள் காப்புறுதி
- மோட்டார் வாகன கடன் வசதி
- SLII பரீட்சையில் சித்தியடைந்து தொழிற் சான்றிதழைப் பெறும் அரிய வாய்ப்பு

Note :- அரச, தனியார் துறைகளில் வேலை செய்பவர்கள் or ஓய்வு பெற்றவர்கள் பகுதி நேரமாக தொழில் புரிய முடியும்.

நேர்முகத் தேர்வுக்கு சுயவிபரக் கோவையுடன் சமூகம் தரவும்

இடம் :- யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதான மண்டபம்
139, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
தொலைபேசி 021 222 3753

காலம்:- 22.04.2009 (புதன்கிழமை)
நேரம் :- 9.30 - 12.30

வ.ரேமண்ட்
க.விமலதீசன்
காப்புறுதி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.

(2515)


## யாழ் உள்ளூராட்சி சபை தேர்தலை நடத்த ஆலோசனை

(கொழும்பு)

மேல் மாகாண சபைத் தேர்தலுக்கு பின்னர் யாழ். உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகவும் அது தொடர்பில் உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாண சபைகள் அமைச்சு ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் பொருட்டு உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஜனக்க பண்டார தென்னக்கோன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை விரைவில் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தவுள்ளார். இந்த சந்திப்பு மேல் மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் நடைபெறவிருப்பதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

மேல் மாகாண சபைத்தேர்தலுக்கு பின்னர் ஊவா, தென் ஆகிய இரண்டு மாகாண சபைகளும் கலைக்கப்படலாம் என்று எதிர்வு கூறப்பட்டிருந்த நிலையிலேயே அதற்கு முன்னர் யாழ். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் ஆலோசித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-4)


**COURSE LENGTH -SIX MONTH**

**ஆறு மாத கால டிப்ளோமா**

தபால் மூலம்

Apr.2009-Sep.2009

1. DIP.IN.PSYCHOLOGY (உளவியல் டிப்ளோமா)
2. DIP.IN.OFFICE ADMINISTRATION (காரியாலய நிர்வாக டிப்ளோமா)
3. DIP.IN.CIVIL ENGINEERING (சிவில் என்ஜினியரிங் டிப்ளோமா)
4. DIP.IN.NURSING ADMINISTRATION
5. DIP.IN.HUMAN RESOURCES MANAGEMENT (மனித வள முகாமைத்துவ டிப்ளோமா)
6. DIP.IN.EDUCATIONAL MANAGEMENT (கல்வி முகாமைத்துவ டிப்ளோமா)
7. DIP.IN.BUSINESS MANAGEMENT (வியாபார முகாமைத்துவ டிப்ளோமா)
8. DIP.IN.HEALTH & HOSPITAL MANAGEMENT
9. DIP.IN.BANKING MANAGEMENT
10. DIP.IN.RESEARCH & DEVELOPMENT

பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்:

கல்முனை, மட்டக்களப்பு,திருகோணமலை, கிண்ணியா,மூதூர், புத்தளம், வவுனியா,மன்னார்,யாழ்ப்பாணம்,கண்டி,கொழும்பு,பதுளை, நுவரேலியா,ஹட்டன், அனுராதபுரம்.

◆மேலதிக விபரங்களுக்கு :
COUNTRY CO-ORDINATOR
MARUTHUR.A.HASSEN
(B.Sc.Psychology, M.Sc.Psychology)
◆யாழ்ப்பாண தொடர்பு மையம்
S.N.Piratheepan
T.P-077-6702505

17 வருட கால அனுபவம்


**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**


24,1st Floor,Super Market Complex Main Street, Sainthamaruthu-07
Web: WWW.AIIMAS.COM,WWW.IIMAT.COM,WWW.AICOMAS.ORG
Tel: 060 267 1749, 060 267 9688, 067 222 2917, 071 803 4848

**விண்ணப்பம் முடிவு திகதி : 28-04-2009**

(2534)

# இ.சபாலிங்கம் வெற்றிக் கிண்ணத்தை 2-வது வருடமாக யாழ்.இந்து சுவீகரித்தது




(யாழ்ப்பாணம்)

கே.டிலக்சன், எஸ்.உமாதரனின் அதி ரடியான துடுப்பாட்டத்தின் மூலம் யாழ்.இந்துக்கல்லூரி அணி 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இ.சபாலிங்கம் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது. இதன்மூலம் இரண்டாவது வருடமாகவும் வெற்றிக்கிண்ணத்தை யாழ்.இந்துக்கல்லூரி அணி தன் வசப்படுத்தியது.

கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கும் யாழ்.இந்துக் கல்லூரி அணிக்குமிடையிலான இ.சபாலிங்கம் வெற்றிக் கிண்ணத்திற்கான மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் போட்டி நேற்று யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 50 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையுமிழந்து 261 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி சதத்தினை பூர்த்தி செய்த எஸ்.உத்தமக் குமரன் 114 பந்துகளில் (11 பவுண்டரிகள் ஒரு சிக்ஸர் உட்பட) 101 ஓட்டங்களை குவித்தது டன், கே.இராகுலன் 49 பந்துகளில் (2 பவுண்டரிகள் ஒரு சிக்ஸர் உட்பட) 43 ஓட்டங்களையும் கே.ஜனுதாஸ் 39 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் எஸ்.உமாதரன் 10 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 40 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் என்.திருத்தணிகன், ஆர்.நிருஜன் ஆகியோர் 2 விக்கெட்டுகளையும் எஸ்.பிரசன்னா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.


பதிலுக்கு 50 ஓவர்களில் 262 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக்கல்லூரி அணி 49.1 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை மாத்திரமிழந்து 262 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இ.சபாலிங்கம் வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்தது.

இதில் கே.டிலக்ஷன் 142 பந்துகளில் (8 பவுண்டரிகள் உட்பட) 92 ஓட்டங்களையும் எஸ்.உமாதரன் ஆட்டம் இழக்காமல் 41 பந்துகளில் (2 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 60 ஓட்டங்க ளையும் என்.சுதாகரன் ஆட்டமிழக்காமல் 10 பந்துகளில் (5பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட)42 ஓட்டங்களையும் ஆர்.நிருஜன் 18, எஸ்.செந்தூரன் 15 ஓட்டங்களையும் குவித்தனர்.

பந்து வீச்சில் என்.கார்த்திக், கே.நிரோஜன், கே.ஜனுதாஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். இவ் வெற்றியின் மூலம் யாழ். இந்துக்கல்லூரி அணி இரண்டாவது முறையாகவும் இ.சபாலிங்கம் வெற்றிக் கிண்ணத்தை தன்வசப் படுத்தியது.

இப்போட்டியில் யாழ்.இந்துக் கல்லூரி அணியின் வெற்றிக்கு திருப்பு முனைய மைத்த கே.டிலக்ஸன் ஆட்டநாயகனாக தெரிவானார். போட்டியில் சிறந்த துடுப்பாட்ட வீரராக கொக்குவில் இந்துக் கல்லூரியின் எஸ்.உத்தமக்குமரனும் சிறந்த பந்து வீச்சாளராக யாழ். இந்துக் கல்லூரி அணியின் எஸ்.உமாதரனும் சிறந்த களத்தடுப்பாளராக யாழ்.இந்துக் கல்லூரி அணியின் பவசுதன் தெரிவாகினார்.

## முரளிதரன் சுழல் ஜாலம் சென்னை அணி வெற்றி



துடுப்பாட்டத்தில் ஹைடனும் பந்துவீச்சில் முரளிதரனும் ஜொலிக்க சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 92 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியை வீழ்த்தியது. இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் இரண்டாவது இருபது-20 தொடர் தென்னாபிரிக்காவில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று போர்ட் எலிசபெத்தில் நடைபெற்ற லீக் சுற்றின் 5வது போட்டியில் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் பீற்றர்சன் தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியும் மோதியது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளையிழந்து 179 ஓட்டங்களைக் குவித்தது. இதில் மத்யூ ஹைடன் 35 பந்துகளில் (9 பவுண்டரிகள் 2 சிக்ஸர்கள் உட்பட) 65 ஓட்டங்களையும் பார்த்திப் பட்டேல் 30 ஓட்டங்களையும் றெய்னா 28, பிளின்டொப் 22 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் பிரவீன் குமார் 2 விக்கெட்டுகளையும் ஸ்ரையன், பீற்றர்சன் ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர். பதிலுக்கு 20 ஓவர்களில் 180 ஓட்டங்கள் என்ற இமாலய வெற்றி இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி 15.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையுமிழந்து 87 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 92 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. இதில் கலிஸ் 24 ஓட்டங் களையும் உத்தப்பா, டிராவிட் ஆகியோர் தலா 20 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்து வீச்சில் முரளிதரன் 4 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 11 ஓட்டங்களை மாத் திரம் கொடுத்து 3விக்கெட்டுகளை வீழ்த்தி ஆட்ட நாயகனாக தெரிவானார். இவ் வெற்றியின் மூலம் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 2 புள்ளி களை பெற்றது.

# பொதுமக்கள் மீதான தாக்குதல்களை இராணுவத்தினர் நிறுத்த வேண்டும்

## விடுதலைப் புலிகள் அறிக்கை

பொதுமக்கள் வாழும் பகுதிக்குள் எறிகணைத்தாக்குதல், குண்டுத் தாக்குதல் உட்பட்ட அனைத்துவிதமான இராணுவ நடவடிக்கைகளையும் நிறுத்துமாறு விடுதலைப் புலிகள் வலியுறுத்தியுள்ளனர்.

அமெரிக்காவின் அறிக்கைக்கு நன்றி தெரிவித்து விடுதலைப் புலிகளின் அரசியல் தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வன்னியில் உள்ள முல்லைத்தீவு பிராந்தியத்தில் அதிகரித்திருக்கும் மனித பேரவலங்களைத் தொடர்பு படுத்தி 16 ஏப்ரல் 2009 அன்று வெளியிடப்பட்ட அமெரிக்க அரசாங்கத்தின் அறிக்கையில் உண்மையான கவலைகள் வெளிப்படுத்தியிருந்தமைக்காக தமிழீழ விடுதலைப்புலிகள் பாராட்டுத் தெரிவிக்கின்றது.

பாதுகாப்பு வலய பகுதியில் உள்ள பொதுமக்களின் துன்பகரமான நிலைகளுக்கு புறம்பாக தமிழர் தாயகத்தில் உள்ள ஏனைய பகுதிகளில் உள்ள தமிழ் மக்களும் மோசமான இராணுவ அடக்குமுறைகளுக்கும் எண்ணிக்கையற்ற அவமதிப்புக்களுக்கும் முகம்கொடுத்து வருவதுடன் அவர்களுக்கான அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்டிருக்கின்றது.

இது வரை உலகின் ஏனைய பாகங்களில் இருக்கும் நாடுகள் குற்றச்சாட்டுக்களை பகிர்ந்து கொள்வதில் தமது கவனத்தை குவித்துள்ள வேளையில் பாதுகாப்பு வலயப்பகுதியில் தாக்குதல்களுக்கு உட்படுத்தப்படும் தமிழ் மக்களது துயரங்களை உடனடியாக முடிபுக்கு கொண்டு வரும் வகையில் தீர்வுகளை கண்டறியும் முக்கியத்துவத்தை வற்புறுத்திக் கூறுகின்ற ஒரேயொரு அரசாங்கமாக அமெரிக்கா இருக்கின்றது.

பொதுமக்கள் வாழும் பகுதிக்குள் எறிகணைத் தாக்குதல்கள், குண்டுத்தாக்குதல்கள் உட்பட அனைத்து விதமான இராணுவ நடவடிக்கைகளையும் நிறுத்துமாறு அரசாங்கத்தை விடுதலைப்புலிகள் வற்புறுத்துகின்றது.

அத்துடன் அமெரிக்காவும் இதர அனைத்துலக சமூகமும் விடுக்கும் போர் நிறுத்தத்துக்கான அழைப்பை ஏற்றுக் கொள்ளுமாறும் அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறது.

அத்தகைய போர் நிறுத்தமானது பொருத்தமான அனைத்து விடயங்கள் சார்பாகவும் பேச்சுக்களை நடத்துவதற்கு சாதகமான சூழலை உருவாக்கும் என நாங்கள் நம்புகின்றோம்.

எவ்விதமான முன் நிபந்தனைகளையும் கேட்டுக் கொள்ளும் நிலையில் நாங்கள் இல்லை என்ற அரசாங்கத்தின் அண்மைய அறிக்கைகளை நாங்கள் கவனத்தில் கொண்டிருக்கிறோம்.

தமிழ் மக்களது அடிப்படை உரிமைகள் தொடர்ச்சியாக மறுதலிக்கப்படும் போது, எங்களது மனக்குறைகளை இராணுவ நடவடிக்கைகள் ஊடாக (அரசியலமைப்பில் மாற்றங்களை கொண்டு வருவதால் அல்ல) தீர்க்கப்பட முடியும் என அரசாங்கம் எண்ணுகிற போது; ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் மற்றும் பிறக்காத குழந்தைகள் போன்றோர் எறிகணை வீச்சினால் கொல்லப்படுவது உள்ளடங்கலாக தமிழர்களுக்கு எதிராக அநீதிகள் இழைக்கப்படும் போது; அனைத்துலக சமூகம் செவிடாக அமைதியாக அவதானித்துக் கொண்டிருக்கும் போது, சிலர் எமது சமூகத்தை அவர்களது அரசியல் விளையாட்டுக்களின் பகடைக் காய்களாக பாதிக்கும்போது, விடுதலைப் புலிகளும் சுதந்திரத்துக்கான எமது போராட்டமும் தொடர்ந்த வண்ணம் இருக்கும்.

வழிமுறைகள் மாறுபடலாம். ஆனால் இராணுவ வெற்றிகளால் அடையப் பட முடியும் என கற்பனை பண்ணுவது போல இலங்கையினால் அமைதியாக வாழ முடியாது.

இருந்தாலும் மோதல்களை முடிபுக்கு கொண்டு வருவதற்கான சமாதான வழிமுறைகளை ஆராய்வதற்கு விடுதலைப் புலிகள் எப்போதும் தயாராக இருக்கிறது என்பதை மீண்டும் அது சுட்டிக்காட்ட விரும்புகின்றது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-1)

# வவுனியாவில் நேற்றிரவு பெண் வைத்தியர் சுட்டுக்கொலை

(கொழும்பு)

வவுனியா பொது வைத்தியசாலையின் பெண் நோயியல் நிபுணராகிய (வீஓஜி) டாக்டார் மீரா மொகிதீன் நேற்று மாலை 7 மணியளவில் தோணிக்கல் தனியார் வைத்திய சாலைக்கு அருகில் வைத்து இனம் தெரியாதவர்களினால் சுடப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட அவர் மரணமடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா வைத்தியசாலையில் நீண்ட காலம் பணியாற்றி வந்த டாக்டர் மீரா மொகிதீன் வவுனியா பட்டாணிச் சூரைச் சேர்ந்தவர்.

இச்சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

வைத்திய நிபுணர் டாக்டர் மீரா மொகிதீன் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் அரச வைத்தியர்கள் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சூட்டுச் சம்பவத்தையடுத்து வவுனியா நகரப் பகுதியில் படையினர் தீவிர சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்ததாக செய்திகள் தெரிவித்துள்ளன.

(ச-5)

## புதுமாத்தளன் வைத்தியசாலை...

மோதல்கள் இடம்பெற்று வருவதாகவும் அப்பிரதேசத்திலிருந்து பெருமளவிலான மக்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதி நோக்கி இடம் பெயர்ந்து வருவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ள நிலையில் புதுமாத்தளன் பிரதேச நிலைமைகள் தொடர்பாக மருத்துவர் சத்திய மூர்த்தி பி.பி.சிக்கு நேற்று கூறியதாவது,

புதுமாத்தளன் வைத்தியசாலைப் பகுதிக்கு மிக அண்மையாக சண்டை நடைபெற்று வருகின்றது. அங்கிருந்த பொதுமக்கள் அனைவரும் அப்பகுதிகளில் இருந்து வெளியேறியிருப்பதாக எனக்கு தகவல்கள் வந்துள்ளன.

எம்மால் அங்கு செல்லமுடியவில்லை. புதுமாத்தளன் மருத்துவமனைக்கும் வலைஞர்மடத்திற்குமிடையில் சுமார் நான்கு கிலோ மீற்றர் தூரம்இருக்கும் என நினைக்கிறேன்.

புதுமாத்தளனிலிருந்து வந்த எமது ஊழியர்களின் தகவல்படி அங்கிருக்கின்ற மக்களில் ஒரு பகுதியினர் படையினரின் பகுதிக்கு சென்றிருப்பதாக கூறியுள்ளனர்.

தற்போது புதுமாத்தளன் மருத்துவமனை முற்றாக செயலிழந்துவிட்டது. இருந்தாலும் அங்கிருக்கின்ற வயோதிபர்கள் மற்றும் கடுமையான காயங்களிற்கு உள்ளானவர்களை அங்கிருந்து முள்ளிவாய்க்கால், வலைஞர் மடம் பகுதிகளுக்கு கொண்டுவர பலரின் உதவியை நாங்கள் நாடியுள்ளோம்.

ஷெல் வீச்சுச் சத்தங்கள் தொடர்ந்து கேட்ட வண்ணமே உள்ளன. எமது ஊழியர்கள் கடற்கரைவீதியூடாக புதுமாத்தளன் மருத்துவமனைக்குச் சென்று வந்திருக்கிறார்கள்.

வீதிகளின் ஓரங்களில் இறந்தவர்களின் உடலங்களும் காயமடைந்தவர்களும் இருப்பதாக அவர்கள் கூறியிருந்தார்கள். இருந்த போதும் அவர்கள் அனைவரையும் இங்கு கொண்டுவருவதற்கான வசதிகள் எதுவுமில்லை.

முள்ளிவாய்க்கால் மருத்துவமனையில் சுமார் 250க்கும் மேற்பட்ட காயமடைந்தவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இது தவிர அந்த வைத்தியசாலையில் 40க்கும் மேற்பட்ட இறந்த உடலங்களும் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலைஞர்மடம் வைத்தியசாலையில் 120க்கும் மேற்பட்ட காயமடைந்தவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இங்கு 12 இறந்தவர்களது உடலங்கள் வைக்கப்பட்டுள்ளன.

இங்கு கொத்துக் குண்டுத் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டதில் பலர் காயமடைந்துள்ளார்கள். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கப்பல் நாளை (இன்று) இங்கு வராது என அறிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதல்கள் காரணமாக எமது ஊழியர்களும் மருத்துவமனைக்கு வரவில்லை. எனவே எம்மிடம் அவசர நிலைகளுக்காக ஓரளவு மருந்து இருந்தும் எம்மால் அவற்றை பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது என்று அவர் தெரிவித்துள்ளார்.

(ச-14)

# ரவிசங்கர் இலங்கை வந்தார்

வாழும்கலை அமைப்பின் நிறுவுநர் ரவி சங்கர் நேற்று இலங்கையை வந்தடைந்தார். கொழும்பிலுள்ள பௌத்த காங்கிரஸ் நிலையத்தில் திரண்டிருந்த மக்களுக்கு ஆசீர் வழங்கினார். இவர் இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தில் வவுனியாவுக்கு சென்று மோதல்களில் பாதிக்கப்பட்டு வவுனியாவிலுள்ள நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களை சென்று பார்வையிடவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை தமிழ் மக்கள் மிகவும் வேதனை அனுபவித்து கொண்டிருக்கிறார்கள் இதிலிருந்து அவர்கள் மீண்டு மறுமலர்ச்சி பெறும் நோக்கில் அவர் பல் வேறு இடங்களில் பிரார்த்தனைகளையும் செய்யவிருக்கின்றார். பாதிக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு வாழும்கலையின் மூலமாக நிவாரண தொகை வழங்கப்படவிருக்கின்றது.

(ச-5)

## பிரி.நாடாளுமன்ற...

கடந்த மூன்று மாதங்களுக்கு பின்னர் நாடாளுமன்றம் நேற்று திங்கட்கிழமை கூடிய வேளையில் இடம்பெற்ற முற்றுகையின் போது ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களால் நாடாளுமன்றம் முன்பாக உள்ள சதுக்கத்தை சுற்றி போடப்பட்டுள்ள கம்பி வேலிகள் உடைத்து எறியப்பட்டதுடன் சதுக்கத்துக்குள்ளும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் நுழைந்தனர்.

கடந்த 11ம் திகதி தொடக்கம் மேற்படி சதுக்கத்துக்குள் ஆர்ப்பாட்டம் நடத்த முடியாமல் கம்பி வேலிகள் போடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன்14 ஆவது நாளாக சாகும் வரையிலான உண்ணாநிலைப் போராட்டத் தினை முன்னெடுக்கும் சுப்பிரமணியம் பரமேஸ்வரனை அங்கிருந்து அகற்றுவதற்கான முயற்சிகளிலும் பொலிஸார் இறங்கியிருந்தனர்.

இந்நிலையிலேயே நாடாளுமன்றத்திற்கு முன்பாக நேற்று அதிகாலை தொடக்கம் 7 ஆயிரத்திற்கும் அதிகமான தமிழர்கள் திரண்டனர். (ச-5)

## புதுமாத்தள...

அதிகாரியொருவர் கூறியி ருப்பதாக றொய்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

இராணுவ பேச்சாளர் உடனடியாக கருத்துத் தெரிவிக்கா விட்டாலும் மேலும் இரண்டு இராணுவ வட்டாரங்கள் இந்தக் குண்டுத் தாக்குதல் சம்பவத்தை உறுதிப்படுத்தியிருப்பதாக றொய்டர் தெரிவித்துள்ளது. (ச-5)

## யாழ்.பாட...

அவர் மேலும் தெரிவித் ததாவது,

கல்வியமைச்சின் சுற்று நிருபத்திற்கமைவாக பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான திகதி 21.04.2009 ஆகும்.

ஆனால் தவிர்க்க முடியாத காரணங்களின் நிமிர்த்தம் இத் திகதி 27.04.2009ஆம் திகதிக்கு (திங்கட்கிழமை) பிரதம செயலாளரினால் மாற்றப்பட்டுள்ளது.

அதனால் யாழ்.மாவட்ட அனைத்துப் பாடசாலைகளிலும் 27.04.2009ஆம் திகதியிலிருந்தே இரண்டாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கேற்ற வகையில் சகல வலயங்களுக்கும் அறிவித்து பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் பின் நகர்த்தப்படும் நான்கு பாடசாலை நாட்களுக்குப் பதிலாக 27.04.2009 ஆம் திகதிக்குப் பின்னர் வரும் சனிக்கிழமைகளில் பாடசாலைகளை நடத்தி அதனை நிவர்த்தி செய்யவும் என வடமாகாண கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (ச)

# 35 ஆயிரம் மக்கள் படையினரிடம்...

மண் அரணின்3 கிலோமீற்றர் அளவிலான பகுதியினை நேற்றுக் காலை பாதுகாப்புப் படையினர் கைப்பற்றியுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கான நடவடிக்கையை இராணுவத்தின் 58ஆம் மற்றும் 53ஆம் படையணியினர் மேற்கொண்டுள்ளனர் எனவும் ஊடக தகவல் மையம் அறிவித்துள்ளது.

அதேவேளை பாதுகாப்பு கருதி இராணுவத்தினரிடம் வரும் பொதுமக்கள் மீது நேற்று 3 தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இவற்றில் 17 பேர் வரை உயிரிழந்துள்ளதுடன் 100 பேர் வரை காயமடைந்துள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை படையினர் நேற்று முன்தினம் நள்ளிரவிலிருந்து மேற்கொண்ட விசேட இராணுவ நடவடிக்கையின் பலனாக சுமார் 35ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள புதுமாத்தளனிலிருந்து படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள புதுக்குடியிருப்புப் பிரதேசத்திற்கு வந்திருப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று கொழும்பில் அறிவித்துள்ளார்.

நேற்றுக் காலை விமானப்படைத் தலைமையகத்திற்குச் சென்ற ஜனாதிபதி அங்கு வன்னிமக்கள் தொடர்பான வீடியோ ஒளிப் பதிவுகளை பார்வையிட்டார்.

அதன் பின் அலரிமாளிகையில் நேற்று மாலை நடைபெற்ற நிகழ்வொன்றின் போது இத்தகவலை ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து தமிழ்ப் பொதுமக்கள் ஆயிரக்கணக்கில் திரள் திரளாக வெளியேறி இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வருகிறார்கள்.

சுமார் 35ஆயிரம் பேர் மோதல்களற்ற பகுதியிலிருந்து வெளியேறி கழுத்தளவு நீர் நிறைந்திருக்கும் நீர் ஏரியினூடாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு வந்து குவிந்திருக்கிறார்கள். இதனை நான் நேரடியாகவே அவதானித்தேன்.

அவர்கள் வெளியேறுவதைத் தடுக்க புலிகள் துப்பாக்கியால் சுடுகிறார்கள். தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடத்துகிறார்கள். ஆனால் மக்கள் அவற்றையெல்லாம் மீறி எமது பிரதேசத்திற்கு வந்து கொண்டிருக்கிறார்கள்.

இது புலிகள் மீது அந்த மக்கள் நம்பிக்கை இழந்திருப்பதனையும் அரசாங்கம் மீதும் படையினர் மீதும் நம்பிக்கை வைத்திருப்பதனையுமே எடுத்துக் காட்டுகிறது என்று அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் பகுதிகளில் இருந்து மக்கள் வெளியேறும் வீடியோ காட்சிகளும் நேற்று ஊடகவியலாளர்களுக்கு காண்பிக்கப்பட்டது. இதேவேளை படையினரால் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கை இலங்கையில் மட்டுமல்ல; உலக இராணுவ வரலாற்றிலேயே மேற்கொள்ளப்பட்ட பெரிய பொதுமக்கள் மீட்பு நடவடிக்கை என்று படையினருக்கு புகழாரம் சூட்டிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, விடுதலைப்புலிகளும் அவர்களது தலைவர்களும் கொல்லப்படுவதனை நாங்கள் விரும்பவில்லை என்றும் அதனால் அவர்கள் ஆயுதங்களை கையளித்துவிட்டு படையினரிடம் சரணடைவதே உசிதமானது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-5,14)

## வன்னியிலி...

வவுனியா செயலக அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் அம் மக்களை நான்கு பாடசாலைகளில் தங்க வைப்பதற்கான உடனடி ஏற்பாடுகளை செய்வது என்று வவுனியா செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் முடிபு செய்யப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

இதற்கிடையில் வன்னியில் இருந்து 4 பேருந்துகளில் நூறுக்கும் மேற்பட்ட காயமடைந்தவர்கள் வவுனியா வைத்தியசாலைக்கு நேற்று கொண்டு வரப்பட்டிருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

இடம் பெயர்ந்த மக்கள் 229 பேர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு வந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. வன்னியிலிருந்து இது வரையில் 6300 பேர் இடம்பெயர்ந்து யாழ்.மாவட்டத்திற்கு வந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## இன்று கப்பல்...

யாழ்.மாவட்ட செயலகத்தில் பிரயாணத்தினை மேற் கொள்வதற்கு அனுமதிச் சீட்டி னை பெற்றுக் கொண்டவர்களும் அவசர தேவையின் நிமிர்த்தம் செல்ல இருப்பவர்களும் இன்று காலை யாழ்.புகையிரத நிலையத்திற்கு சமுகமளிக்குமாறு அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

(ச)

## பாதுகாப்பு வலயத்...

மக்கள் பாதுகாப்பு வலய பகுதிகளான மாத்தளன்,அம்பலவன் பொக்கணை் பகுதி களை நோக்கி படையின் நேற்று அதிகாலை பாரிய படை நடவடிக்கையினை ஆரம்பித்தனர்.

அதன் பின்னர் மாத்தளன் தொடக்கம் அம்பலவன் பொக்கணை, வலைஞர்மடம் உள்ளிட்ட பகுதிகளில் ஆட்லெறி பீரங்கிக் குண்டுகள், எறிகணை, கொத்து எறிகணைக் குண்டுகள், பல்குழல் வெடிகணைகள், குறுந்தூர மற்றும் நெடுந்தூர பீரங்கி குண்டுகள், கனரக மற்றும் தொலைதூர துப்பாக்கிகள் மற்றும் வான் குண்டுத் தாக்குதல்களை நேற்று மேற்கொண்டுள்ளனர். இதன் போது ஆயிரத்து 496 பேர் உயிரிழந்துள்ளனர். 3333 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இதேவேளை பாதுகாப்புக்காக மக்கள் ஓடி பதுங்குகுழிக்குள் இருந்த போதும் குண்டுகள் வீழ்ந்து வெடித்தாலும் பெருமளவிலான மக்கள் அவற்றுக்கு உள்ளேயே உயிரிழந்துள்ளதாக வன்னிச் செய்திகள் தெரிவித்தன.

காயமடைந்தவர்கள் உரிய சிகிச்சையின்றி உயிரிழந்ததாகவும் உயிரிழந்தவர்களின் உடலங்களை அந்தந்த இடங்களிலேயே காணப்படுவதாகவும் வன்னித்தகவல்களை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன. (ச-3,5,14)

## பிரபாகரன்...

பகுதியில் இருந்து இன்று (நேற்று) மட்டும் 35ஆயிரம் பேர் வெளியேறி உள்ளனர். விரைவில் ஒட்டுமொத்த மக்களையும் மீட்டுவிடுவோம்.

விடுதலைப் புலிகள் முற்றிலும் தோல்வி அடையும் நிலையில் உள்ளனர்.

பிரபாகரனுக்கு 24 மணி நேரம் கெடு விடுக்கிறோம். அவரும் அவரது குழுவினரும் அதற்குள் சரணடைய வேண்டும். இல்லை என்றால் எங்கள் படை அவர்களை அடியோடு வீழ்த்தி விடும்.

இக்காலக்கெடு நேற்று மதியம் 12 மணியிலிருந்து இன்று மதியம் 12 மணிவரை அமுலில் இருக்கும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5,14)


**இடம் மாற்றமும், மலிவு விற்பனையும்**

சகல விதமான சைக்கிள் உதிரிப்பாகங்கள், வீட்டு மின் இணைப்புக்குத் தேவையான மின் சாதனப்பொருட்கள் (வயர்),கிறைன்டர்,சாச்சர் லைற், 6Vபற்றி, றைஸ்குக்கர், காஸ் குக்கர், பிறசர் குக்கர், மண்ணெண்ணெய் குக்கர், ஸ்ரப்பிளைசர், அயன் பொக்ஸ், கொட் பிளேற், மின்கேத்தல், கீற்றர், அவண், சிற்றிசன், கச்சியோ, சீக்கோ கை மணிக் கூடுகள், சுவர் மணிக்கூடுகள் ஆகியவற்றை சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும் புட்போல், வோலிபோல் கறம் போட், அன்பளிப்பு பொருட்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

**நியூ சிற்றி ரேடர்ஸ், 319 A, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.**

*குறிப்பு; மேற்படி எமது ஸ்தாபனத்திற்கு யாழ் நகரில் வேறு கிளைகள் இல்லை.*

T.P. 021 222 3226

(C-2351)



**சித்திரை புதுவருட ஆரம்பத்தில்**

பெற்றோர்களே!
உங்கள் சிறார்களை கணனி யுகத்துடன் இணைக்கத் தயாராகி விட்டீர்களா!
இன்றே எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

**24.04.2009, 25.04.2009- புதிய கணனி கற்கை நெறிகள் ஆரம்பம்.**

*நேரம்:- உங்கள் விருப்பத்திற்குரியது.*

**முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.**
**மேலதிக விபரங்களுக்கு -நேரில்**
**021-4590042, 0602210727**

NEW MICRO
COMPUTER SYSTEMS
COMPUTER EDUCATIONS

இல. 30, பிரதான வீதி,
சங்கானை.

(C-2392)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.04.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.